# சிரித்திரன்

தை 1977 விலை 75 சதம்




**ஆண்டவர்**

நாங்கள்
நவயுக
நாயன்மார்கள்—
பழைய
கடவுளை
இறக்கி
புதிய கடவுளை
ஏற்றிப்
போற்றுபவர்.
எமது கலாச்சாரம்—
கலண்டர்
கலாச்சாரம்

—வர்மன்

**திரைவர்ணம்**

(நிழல் கதை....)
விக்ரர் அன் சன்ஸ்
வழங்கும் 20/-
பரிசைப் பெற....
8-ம் பக்கம் புரட்டுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் பொன்னுலகம் காண எமது
புத்தாண்டு வாழ்த்துக்கள்

உங்கள் தங்க வைர நகைகளுக்கு

இன்றே விஜயம் செய்யுங்கள்.

★ லலிதா ஜுவலறி ★

உரிமையாளர் :

செல்லையா இந்திரசித்து

இல. 133, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலை மக்களுக்காகவா அல்லது...



அண்மையில் நான் ஒரு கலை நிகழ்ச்சிக்குப் போயிருந்தேன். ஒவ்வொரு நிகழ்ச்சியும் முடிய ஒவ்வொரு கூட்டம் மண்டபத்திலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தது. வெளியேறும் ஒரு ரசிகனை நான் ஏன் ''ஐயா... சலிப்புத்தட்டி விட்டதா... கிளம்பி விட்டீரே'' எனக் கேட்டேன். ''இல்லை நான் வேலை பார்க்கும் ஸ்தாபன மனேஜர் மகளின் நாட்டியம் முடிந்தது. இனி ஏன் இருப்பான்" என்று கூறிவிட்டு நடையைக் கட்டினார். அவருடன் இப்படியான ஒரு கும்பல் வெளியேறியது. அடுத்த நிகழ்ச்சி முடிந்ததும் இன்னுமொரு கூட்டம் வெளியேறிற்று. அவர்களில் ஒருவரை ஏன் போகிறீர்களென அதே கேள்விக் கணையை விடுத்தேன். எனது சொந்தக்காரியின் பாட்டு முடிந்தது... போவம்'' என்றார். எமது கலாரசனையெல்லாம் நிர்ப்பந்தத்திற்காகவும் பந்த சொந்தங்களுக்காகவும் என்பதை உணர்ந்துகொண்டேன். புத்தக வெளியீடு இன்னுமொரு விதமானது. அது ''அற்ஹோம்" மாதிரி நடைபெறுகிறது. அதில் உற்றார் உறவினர் நண்பர்கள், எழுத்தாளர்களின் கட்சியினர் எல்லாரும் குழுமியிருப்பார்கள். கூட்ட முடிவில் ஒவ்வொருவரும் தமது அந்தஸ்திற்கேற்ப பணம் கொடுத்து புத்தகம் வாங்கி ஏகுவார்கள். அங்கு பொதுமக்களின் நிழல்கூடத் தென்படாது. கலை மக்களுக்காக என்று மார்பு தட்டும் இக்காலத்தில் பொதுமக்கள் எங்கள் கலைவிழாக்களில் கலந்து கொள்ளாமல் இருப்பது பெரும் கவலைக்கிடமானது. மக்கள் ரசனைக்கேற்ப, மக்கள் கலை ஞானத்தை வழங்க நாம் கலை நிகழ்ச்சிகள் நடாத்துவதில்லை.

சென்றவாரம் அச்சுவேலிச் சந்தியில் நான் எனது நண்பன் ஒருவருடன் மங்கல இசையைப்பற்றி பேசிக்கொண்டிருந்தேன். எமது பேச்சைக் கேட்டு ஒரு பெரும் கூட்டமே மங்கல இசை பற்றி ஒரு கலந்துரையாடல் நடாத்துவதற்கு கூடிவிட்டது. அந்த விவசாய மக்களிடமிருந்து எமக்குத் தெரியாத மங்கல இசையின் சங்கதிகளையெல்லாம் கானமிர்தமாகக் காதால்கேட்டு ரசித்தோம். உண்மையில் இன்று மக்கள் கலையாக விளங்குவது மங்கல இசையே. கலை தேசிய பொக்கிஷம். ஆகவே கலைஞர் தேச மக்களை மனதில் வைத்து கலை நிகழ்ச்சி நடத்தவேண்டுமென்பதே இந்த மெயில்வாகனத்தாரின் ஆசை.

— மெயில்வாகனத்தார்

# ஆராய்ச்சிமணி

## ஏன் இந்த இன்னல்?

மக்கள் நாட்டுக்காக நாடு மக்களுக்காக, இது சனநாயக தத்துவத்தில் ஒரு கோட்பாடாகும். அதுபோலப் போக்குவரத்து நேரத்தை மிகுதிப் படுததுவதற்கேயன்றி மக்களை இடைஞ்சலுக்குள் தள்ளுவதற்கு ஆக அன்று.

நமது நாட்டில் எமக்குக் கிடைக்கும் போக்குவரத்துவசதிகளுள் புகையிரதமும் ஒன்று. இந்நாட்டில் மிக நெடுந்தூரப் பிரயாண சேவைகள் இல்லை எனினும் புகையிரத மூலம் பிரயாணம் செய்யும் பிரயாணிகள் பல இடைஞ்சலுக்கு ஆளாகின்றனர் என்பது சொல்லாமலே விளங்கும்.

அவற்றுள் பிரதானமானது களவு. தமது உடமைகளான பணம் நகை, கல்விச்சான்றிதழ்கள் இவற்றினை இழந்தவர்கள் அநேகர். இதனால் தமது வாழ்க்கையினை இழந்தவர்கள் தம் விதியை நோவதா, தாம் பிறந்த தாய் நாட்டை நோவதா?

இந்தச் சூழ்நிலையை மாற்றுவதற்கு வழி இல்லையா? உண்டு என்று எனது உணர்வு சொல்லுகின்றது. தூர இடங்களுக்குச் செல்லும் புகையிரதங்களில் மிக முக்கியமான பொருட்களைக் கொண்டு செல்லும் பிரயாணிகளின் பொருட்களைப் பாதுகாப்பதற்கு ஒரு பொருட் பாதுகாப்பு அறை உண்டாக்கப்படவேண்டும். அவர்கள் பிரயாணம் செய்து முடிவடையும் நிலையத்தில் அவர்களின் பொருட்கள் திருப்பிக் கையளிக்கப்படவேண்டும். இதனால் களவைப் பாதுகாப்பது மாத்திரமன்றி மனமுறிவுகளையும் பாதுகாக்கலாம்.

சமீபத்தில் ரூமேனியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ரயில்வேப் பெட்டிகளைப் பற்றியும் நாம் சற்றுச் சிந்திக்கவேண்டும். இப்பெட்டிகளில் பொருத்தப்பட்டிருக்கும் படிகள் அவசரத்துக்கு இறங்க முடியாதவை. வயதுவந்த பெரியவர்கள் படும் சிரமம் கொஞ்சமன்று. அரசு இதுபற்றிக் கவனம் செலுத்துமா?

திக்கவயல் தர்மகுலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசப் பிரிவினை




இவரை உங்களுக்குத் தெரியாதா... இவர்தான் பிரபல கலைஞன் சுகுமார்

யோவ் நான் பிரபல கலைஞன் என்றால் அவருக்குத் தெரிந்திருக்குமே... நீ அறிமுகப்படுத்தத் தேவையில்லையே!

அதிமதுரம்

ஒருவர் : போஸ்மாஸ்டர் சேர்... இந்த மணியோடருக்குப் பணம் தாருங்க.

போஸ்மாஸ்டர்: உங்களை எனக்கு முன்பின் தெரியாதே!

ஒருவர் : என்ன சேர் அப்படிச் சொல்லுறீங்க... நீங்கள் இருக்கும் பிளாற்றில்தான் நானும் இருக்கிறேன்... பிளாற்றில் மனித உறவு இப்படித்தான்

அதிமதுரம்

❋

என்னுடைய மகள் மாப்பிள்ளையின் படத்தைப் பார்க்க விரும்புகிருள்... உங்க மகனின் படமிருந்தால் ஒன்றுதாங்க.

அவனின் படமொன்றுமில்லையே தருவதற்கு... எக்ஸ்ரேய் படமென்ருல் ஏராளமாயிருக்குத் தருவதற்கு

❋

என்ன உன் உடல் தேய்ந்து கொண்டு போகிறதே!

குழவி தேயாமலிருப்பதற்காக என் மனைவி சமைப்பதில்லை.

ஜோக்கிரட்டீஸ்

❋

வீட்டுக்காரர் : ஏன் எங்களுக்குத்தாற பாலில் தண்ணீர் கலக்கிருய்?

பால்க்காரர் : உங்களுக்குச் சுத்தமான பாலாகத் தருவதற்கு கழுவுகிறதற்கு...

❋

அயலவன் : உங்க ரேடியோ ரிப்பெயர் செய்யவேணும் போல... அதில்வரும் சங்கீதம் சகிக்கமுடியாமல் இருக்கிறதே.

வீட்டுக்காரன் : இல்லை மனைவி ரேடியோவோடு கூடிப் பாடுற படியால் அப்படியிருக்கு.



எம். பி.க்களுக்கு பென்ஷன் வழங்கப் போகிறதாம் அரசாங்கம்.

உந்த விஷயத்தில் கண்டிப்பாக எம்.பி.க்களுக்குள் கருத்து வேற்றுமை வராது.

ஒரு செய்தி கேட்டீங்களா?

என்னது.

வெள்ளம் ஆடு மாட்டை அடிச்சிட்டுப் போட்டுதாம்.

உதென்ன பெரும் செய்தியா... நம்ம வீதியிலுள்ள குழாய்த் தண்ணி குடங்களை அடிச்சிட்டுப் போட்டுதாம்.

★

திருடன் : ஏய்... உந்த டயரியைத் தா... இல்லாவிட்டால் கொன்றுவிடுவேன்.

வழிப்போக்கன்: நீ திருடனுச்சே.. உனக்கேன் டயரி.

திருடன்; என் மனைவி என் திருட்டுக் கணக்கு எழுதுவதற்கு.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்ச்சி



கணவன்: புதுவருஷத்தோடு உயற்சி கிடைத்திருக்கிறது.



மனைவி: புது வருஷத்திற்கு ஒரு சந்தோஷமான செய்தி அத்தான்... உயர்ந்த உத்தியோகத்திலிருக்கும் நீங்கள் கவுரவமாக வேண்டும். களிசான், சட்டை, 'ரை' எல்லாம் நிறைய வாங்கவேண்டும். சிறப்பாக உடுத்துக்கொண்டு சைக்கிளிலோ பஸ்ஸிலோ கந்தோருக்குப் போவது அணியும் உடையை அவமதிப்பதாகும். நீங்கள் ஒரு காரில்தான் போகவேண்டும். ஒரு கார் வாங்கவேண்டும். கார் வாங்கினால் முற்றத்தில் விடுவது காருக்கு அழகில்லை. ஒரு 'கராஜ்' இல்தான் விடவேண்டும். ஆகையால் நாங்கள் ஒரு கராஜ் உள்ள பெரிய வீடாக எடுக்கவேண்டும். பெரிய வீட்டில் நாம் வாழ்ந்தால் நான் நகைநட்டு பட்டு என்று அணியவேண்டும்... எல்லாவற்றிற்குமாக நம்ம காணியை விற்று...

கணவன்: யோவ், யோவ் யோவ்... நம்ம வீட்டுக்காரன் எங்களை கீழ் வீட்டிலிருந்து மேல்வீட்டிற்குப் போகட்டாம். அந்த உயற்சியைச் சொன்னேன்.

○

சோதிடர்: உனக்கு நாலு வருடத்திற்கு ஒருக்கால் அலையிற பலனிருக்கு.

உத்தியோகஸ்தர்: சரியாச் சொன்னீங்க... நாலு வருஷத்திற்கு ஒருக்கால் இடம் மாற்றலாகி வீடு தேடி அலையிற தலைவிதிதான்.



Mrs. டாமோடிரன்: டார்லிங் கறிக்குப் பாவிக்கிற 'கோக்கனற்' றுக்கு சிங்களத்தில் 'பொல்' என்று சொல்லுறது... டமில்லை என்ன சொல்றது?...

Mr. டாமோடிறன்: ஓ...அதுவா... தென்னங்கொட்டே சொல்லுறது...

## —தெருத்தாண்டவம்—



மாரிகாலம் - காரோடும் வீதிகளில் சேறடிக்காமலிருக்க மைனர் பிடிக்கும் சில அபிநயங்கள்.

இயமன் மனைவி: ஏன் பிராணநாதா கவலையோடு இருக்கிறீர்கள்.

இயமன்: இலங்கையை நினைக்கக் கவலையாக இருக்கிறதே. அங்கு டாக்டர்கள் வேலை நிறுத்தம் செய்வதால் இங்கு ஒருவரும் இப்போ வாறதில்லையே!

அதிமதுரம்

■

கைதி: சேர் எனக்கு ஒரு கலண்டர் தாருங்க.

சிறைக்காவலன்: நீ ஆயுள் தண்டனை காரனாச்சே... உனக்கேன் கலண்டர்.

கைதி: எனக்கு ஆயுள் போவதை பார்ப்பதற்கு.

அன்பே... என் காதலுக்கு என்ன சொல்கிறாய்?

உங்கள் முகம் யாழ்ப்பாணம் மாதிரி இருக்கு... உங்களை நான் விரும்பவில்லை.

என்ன...... யாழ்ப்பாணம் மாதிரியா...

ஆம் யாழ்ப்பாண ரோட்டுகள் மாதிரி கரடு முரடாக இருக்கிறது.

அதிமதுரம்

■

### புதுமொழி

**பதவி உள்ளபோதே பதுங்கிக் கொள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஜராத்திக்கவிதை

## பட்டாசு விளையாட்டு

**மேமன்கவி**

பட்டாசு விளையாட்டு
வாழ்க்கையொரு
பட்டாசு விளையாட்டு
மேலே —
பல... பல வர்ணங்கள்
உள்ளே —
பயங்கர வெடிமருந்து
பட்டாசு விளையாட்டு

வட்டமாய் உருண்டையாய்
சரீரங்கள் இருக்கும்;
அதிலே--
ஆன்மா வெடிமருந்தாகி
மரண விளையாட்டு
விளையாடும்
பட்டாசு விளையாட்டு

நட்சத்திரங்கள் போல்
மின்னும் சில
மத்தாப்பூவாய்
பாயும் சில;
நெருப்பு நண்பனை
அணைத்தவாறே
இந்த மண்ணில் நடக்கும்
அக்கினி விளையாட்டு
பட்டாசு விளையாட்டு

கோபக்கனலை எழுப்பும் சில;
அறியாமைச் சுவரில் மோதி...
வெடிக்கும் சில:
எல்லாமே வானவெளியில்
பறக்க ஆவல் கொள்ளும்
பட்டாசு விளையாட்டு

தொட்டவுடன் வெடிக்கும் சில
மெல்ல... மெல்ல
வெடிக்கும் சில,
இவைகளில்...
எவை... எவை...
எந்த கணம் வெடிக்கும்
என்பது
எவரும் அறியமுடியா
பட்டாசு விளையாட்டு

வெடித்தபின் —
மகிழ்ச்சியை அளிக்கும் சில
வெடித்தபின்
மகிழ்ச்சியை
இழக்கச் செய்யும் சில
திரி உயிர் எரிந்து விட்டால்
எல்லாமே அழிந்திடும்
பட்டாசு விளையாட்டு
வாழ்கையொரு
பட்டாசு விளையாட்டு



# மலர்க்கணை

**ராகவன்**
475, 2-ம் டிவிஷன்
மருதானை - கொழும்பு.

மலர் இதயத்தை பூரணப்படுத்துகின்றது. தனியே சிரிப்பதற்கு மட்டுமல்லாது நல்ல சிறுகதைகளையும் படிக்கவேண்டுமென்றே பலர் சிரித்திரனை எதிர்பார்க்கின்றனர் என்பதை யாவரும் அறிவர். மாதாமாதம் இரு சிறுகதைகளாவது சிரித்திரனில் இடம்பெற வேண்டுமென்பது எனது அபிப்பிராயம். மேலும் வெற்றிநடை போட்டு வளர சிரித்திரனுக்கு எமது வாழ்த்தும் ஆசியும்.

**து. வைத்திலிங்கம்**
கச்சேரி - திருகோணமலை

அரிய நற் கருத்துக்களை சிரிப்பின் மூலம் சிந்தனையாளர்களையே சிந்திக்கவைக்கும் சிற்பியாக பெரிய சேவை செய்த மனித உயிரை நீடிக்கும் உங்கள் சேவை நாட்டுக்குத் தேவை. சமூகப்பணி சீதனத்தடை., அறிவின் ஆக்க வேலை, சமுதாய சீர்திருத்தம் மக்களின் எழுச்சி, இளைஞர் கடமை, அறிஞர்களின் பொறுப்பு இவைகளை மையமாகக் கொண்டு தமிழினத்தை தட்டி எழுப்பும் உங்கள் பணி சிறக்கட்டும்.

மலர் மகிழ்ச்சியையும் மலர்ச்சியையும் ஊட்டியது. வறுமையின் கோரப்பிடியில் சிக்கித்தவிக்கும் அபலைகளிடையே மயிர் நீப்பின் உயிர்வாழாக் கவரிமான் இனப் பெண்களும் வாழ்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்தும் செங்கதிரின் சிறுகதை அருமையானது.

அல்வைச் சுந்தரனின் கவிதை மலையக நிலைமையைத் தெளிவாக்குகின்றது. 'குடும்பங்கள்' ஓர் அற்புதமான கதை.

**பழுவேட்டரையர்**
சி. புளக் இல. 1
அண்டர்ஸன் மாடி,
நாராஹென்பிட்ட

இந்தியாவில் வசிக்கும் நான் என் நண்பர் ஒருவர் மூலம் சிரித்திரனைப் பெற்று படித்து வருகின்றேன். அதில் பல சுவையான விஷயங்கள், துணுக்குகள், கதைகள், கட்டுரைகள் ஆகியன இடம் பெற்றுவருவது மகிழ்ச்சிக்குரியது. ஒய்யப்பங் கங்காணியாரின் பகிரங்கக் கடிதம் வெகு பிரமாதம்.

**வீர. அருண் கருணாநிதி**
தேவகோட்டை - இந்தியா.

மலர் கண்டோம். மணம் நுகர்ந்தோம். சிரிப்பும் சிந்தனையும் இணைந்த சித்திர சிறப்பிதழாக மலர் திகழ்கின்றது. உணர்ச்சி ததும்பும் சிறுகதைகள் அத்தனையும் முத்துக்கள். சிரித்திரன் சிறுகதைகளுக்கு நிகர் எதுவுமில்லை.

சுவடியின் சுவட்டை அடியொற்றும் மெயில் வாகனத்தார் வாழ்க.

**பாலு - ரமணன்**
(சகோதரர்கள்)
இடைக்காடு - அச்சுவேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொம்மலாட்டம்

மேனகை

★ வைஜயந்திமாலா தமிழ், ஹிந்திப்படவுலகில் கொடிகட்டிப் பறந்த மிகச் சிறந்த நடிகை, அதுமட்டுமல்ல அவர் பரத நாட்டியத்திலும் புகழ் பெற்றவர் என்பதும் யாவரும் அறிந்த விஷயமே. அவருக்கு நடனம், நடிப்பு மட்டுமல்ல இனிமையாகப் பாடவும் வரும். அவர்களது முதற்படமான 'வாழ்கை'யில் சொந்தக் குரலில் பாடி நடித்திருக்கிறார். அப்படத்தில் அவர் பாடிய 'எண்ணி எண்ணிப் பார்க்க மனம் இன்பம் கொண்டாடுதே' என்ற பாடல் மிகவும் பிரபல்யமானது.

★ பிரபல ஹாஸ்ய நடிகரான ஏ. கருணாநிதியும், ஹாஸ்ய நடிகையான மனோரமாவும் 'சிங்களப்' படத்தில் நடித்துள்ளார்கள்

★ கோமாளிகள் படத்தை அடுத்து வெளிவரவிருக்கும் ஈழத்துப்படம் ஜெயச்சந்திரா மூவிஸாரின் 'காத்திருப்பேன் உனக்காக' ஆகும். ஸ்ரீலங்கா சாகித்திய மண்டலத்தின் சிருஷ்டி இலக்கியப் பரிசினைப் பெற்றவரான நவாலியூர் நா. செல்லத்துரை கதை வசனம் பாடல்களை எழுதும் இப்படத்தினை எஸ்.வி. சந்திரன் இயக்கி வருகிறார்.

★ ஈழத்தில் நல்ல தமிழ்ப்பெண் நடிகைகள் இல்லையென்ற குறைபாடு நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. இக்குறைபாட்டை ஆனந்தராணி ராஜரட்ணம் போக்கிவிட்டார் என்று துணிந்து கூறலாம். கோமாளிகள் படத்தில் மிஸிஸ் ஐயராக வந்து அமைதியாக அருமையாக நடித்த இவர் சமீபத்தில் வளாக மாணவர்களால் திரு. பாலேந்திராவின் நெறியாள்கையில் அரங்கேற்றப்பட்ட இந்திரா பார்த்தசாரதியின் 'மழை' நாடகத்தில் ஒரு சிக்கலான கதாபாத்திரத்தை ஏற்று மிகவும் அற்புதமாக நடித்துள்ளார். சபாஷ் ஆனந்தராணி.

★ நாவலாசிரியர் டாக்டர் நந்தியைப் பற்றி எல்லோரும் அறிவர் ஆனால் அவர் ஓர் சிறந்த நடிகர் என்பது பலருக்குத் தெரியாது. சமீபத்தில் அவரால் எழுதப்பட்டு அரங்கேறிய 'குரங்குகள்' நாடகத்தில் 'விஞ்ஞானி' யாகப் பிரதம பாகமேற்று அற்புதமாக நடித்த இவர் விரைவில் வெளிவரவுள்ள 'பொன்மணி' திரைப் படத்திலும் நடித்துவருகிறார்.

★ நடிகை விஜயகுமாரிக்கு இலட்சிய நடிகை என்ற பட்டம் உண்டு என்பது தெரிந்த விஷயமே. அவரது இலட்சியம் என்ன வென்பது பலருக்குத் தெரியாமல் இருக்கும். 'மதர்இந்தியா' படத்தில் நர்கிஸ் தாய் வேடத்தில் மிக அற்புதமாக நடித்திருக்கிறார். அந்தமாதிரி ஒரு பாத்திரத்தில் தான் நடிக்கவேண்டும். என்பதுதான் தனது ஆசை, லட்சியம் என்று கூறியுள்ளார் விஜயகுமாரி.

★ தமிழ்ப்படவுலகில் மட்டுமல்ல மலையாளப் படவுலகிலும் கூட நம் ஈழத் தமிழ்க்கலைஞர்களின் புகழ் பரவ ஆரம்பித்துள்ளது. சமீபத்தில் திரையிடப்பட்ட 'செம்மீன்' புகழ் 'ராமுகரியட்'டின் 'நெல்லு' திரைப்படத்தில் ஒளிப்பதிவாளர், பூனா பிலிம் இன்ஸ்டிரியூட்டில் ஒளிப்பதிவுத் துறையில் 'டிப்ளோமாவும்' தங்கப்பதக்கமும் பெற்ற ஈழத்துக் கலைஞர் திரு. பாலா மகேந்திரன் ஆவர்.

★ பிரபல டைரக்டர் கே. பாலச்சந்தருக்கு விசிறிகள் ஏராளம் ஆனால் அவரோ மலையாள டைரக்டர் சேதுமாதவன் (தமிழில் 'நாளை நமதே' எடுத்தவர்) கன்னட டைரக்டர் எஸ். ஆர். புட்டண்ணா (சுடரும் சூறாவளியும் எடுத்தவர்) ஆகியோரின் விசிறியாகத்தான் இருப்பதில் பெருமைப் படுவதாகக் கூறியுள்ளார்.



## வன மகோற்சவம்

மரம் நாட்டும்
வைபவத்திற்கு
விஜயம் செய்யவிருந்த
அந்த—
அரசாங்கப் பிரமுகரின்
வருகையை முன்னிட்டு
சில—
பெரிய மரங்கள்
தறிக்கப்பட்டன

வர்மன்

## 'இரங்கல்'

நானோர்
குருட்டுப் பாடகன்
நாற்சந்திகளில்
நாலுபேர் மத்தியில்
நான் பாடுகையில்
பாடலை ரசித்து—
என்—
பிச்சா பாத்திரத்துள்
'கல்' போட்டுச் செல்லும்
கல் நெஞ்சர்களை
காணாத கண் தந்த
கடவுளுக்கு நன்றி சொல்லும்
நானோர்—
குருட்டுப் பாடகன்

மௌரியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசுக்குரிய கேள்வி

எ. திவாகரன், வண்ணார்பண்ணை

கே. இலங்கை எப்படிப்பட்ட நாடாக இருக்கவேண்டுமென்று விரும்புகின்றீர்?

ப. உல்லாசப் பிரயாணிகளுக்கு மட்டும் மோட்சமாக இருந்தால் போதாது. உள்ளூர் வாசிகளுக்கும் மோட்சமாக இருக்கவேண்டும்.

★

வ. இராஜேஸ்வரி, வவுனியா

கே. சிரித்திரன் ஆசிரியர் என்ன செய்து கொண்டிருக்கின்றார்?

ப. தமிழ் மக்களைச் சிரிக்க வைப்பதற்குச் சிலுவை சுமந்து கொண்டிருக்கின்றார்.

★

உ. மூர்த்தி, விஸ்வமடு.

கே. சினிமாப் படத்திற்கும் கலப்படத்திற்கும் வித்தியாசம் என்ன?

ப. சினிமாப்படத்தில் புதியன புகுகின்றன, பழையன கழிகின்றன. கலப்படத்தில் பழையன புகுகின்றன, புதியன சேமிக்கப்படுகின்றன.

★

வ. சந்திரசேகரம், திருக்கேதீஸ்வரம்.

கே. கடவுள் ஏன் இன்று உலகில் பிரசன்னமாவதில்லை?

ப. அவர் இசைப்பிரியர். இசையும் இன்று கலப்படம்.

★

செ. புலேந்திரன், மட்டக்களப்பு

கே. உலகில் மனிதவர்க்கம் அழிந்தால்?

ப. மூட்டைகளும் அழிந்துவிடும், முதலாளிகளும் அழிந்துவிடுவார்கள்.



வ. அருள்தாஸன், கொடிகாமம்.

கே. மூடனைப் பாராட்டினால்?

ப. கழுதையைப் பாராட்டினால் சங்கீதம் பாடும். சகிக்க வேண்டிய சங்கடம் ஏற்படும்.

★

வி. திருவோணம், அல்வாய்.

கே. எமது அரசியல்வாதிகள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்?

ப. பாதிநேரம் மற்றவர்கள் தன்னைப் புகழ்வதைக் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். பாதி நேரம் தம்மைத்தாம் புகழ்கின்றார்கள்.

★

P. இராமநாதன், கரவெட்டி.

கே. மனிதனுக்கு ஏன் இந்த மண் ஆசை?

ப. பெண்கள் கர்ப்பவதியாக இருக்கும்போது மண் விரும்பி உண்பதால்.

★

சா. புண்ணியமூர்த்தி, சுளுவாஞ்சிக்குடி.

கே. கடவுள் ஏன் மிருகங்களுக்குப் பேச்சு வல்லமையைக் கொடுக்கவில்லை?

ப. அதுகளும் மது அருந்தினால் பேசக்கூடும்.

ம. தயாளினி, கொழும்பு 13

கே. எப்படிப்பட்ட பெண்ணால் இவ்வுலகில் தனது கற்பைக் காப்பாற்ற முடியும்.

ப. பிறவாத பெண்ணாலும் கொமியூனிஸ்ட் நாட்டில் பிறவிஎடுத்த பெண்ணாலும் மட்டுமே இப்பிரபஞ்சத்தில் தனது கற்பைக் காப்பாற்ற முடியும்.

★

ஆர். வரதராஜன், பம்பலப்பிட்டி

கே. நாடகமே உலகம்... உண்மைதானா?

ப. இல்லை கீழைத்தேசத்தில் இன்று சினிமாவே உலகம். மேலைத்தேசத்தில் டெலிவிஷனே உலகம்.

★

எம். அப்துல் ரஹீம், துணுக்காய்.

கே. வருங்கால உலகம் பற்றி உமது கருத்து?

ப. அது சுயநலவாதிகளின் சுடலையாயிருக்கும்.

★

தெ. விசாகப்பெருமாள், அக்கரைப்பற்று.

கே. தொழிலாளி பற்றி உமது கருத்து என்ன?

ப. உலக மக்களின் வாழ்க்கைச் சக்கரத்தை ஓடப்பண்ணுவதற்கு சுழண்டு சுழண்டு உளைக்கும் சக்கரம்.

### நேயர் கவனத்திற்கு

'ஒரு மாற்றம்' சிறுகதை 11-ம் பக்கத் தொடர்ச்சி 10-ம் பக்கத்திலும் 10-ம் பக்கத் தொடர்ச்சி 12-ம் பக்கத்திலும் பார்க்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. குணபாலன், லண்டன்.

கே. மகுடியாரே... உம்மிடம் டெலிவிஷன் இருக்கா?

ப. டெலிவிஷன் இல்லாவிடினும் உங்கள் லண்டனில் நடக்கும் நாடகங்களைப் பார்க்கும் 'விஷன்' என்னிடம் உண்டு.

★

சி. இராஜசேகரன், கரவெட்டி.

கே. மகுடியாரே உமக்கு காதல் பற்றி என்ன தெரியும்?

ப. அது பெற்றோரையும் சகோதரங்களையும் மறைக்கும் கண்நோய். ஒரு தூர திருஷ்டி ஞானமில்லா அஞ்ஞான உணர்வு

★

வ. அருமைநாதன், கம்பளை.

கே. மகுடியாரே உமது புதுவருடத் தீர்மானம் என்ன?

ப. என்னைப் புழுகுவதுமில்லை. பிறரை இகழுவதுமில்லை என்பது தான்.

★

செல்வராஜா, புத்தூர்.

கே. ஓசிப் புத்தகங்களில் அறிவு பொறுக்கிவிட்டு மேடையில் மேதாவிபோல் அறிவு சிந்துபவரைப்பற்றி உமது கருத்து.

ப. அயல் வீட்டு அரிசியில் அன்னதானம் செய்யும் புண்ணியவான்.

★

த. சுபாஜினி, சுன்னாகம்.

கே. மனைவியின் உபதேசங் கேட்டு பெற்றோரையும் சகோதரங்களையும் உதாசீனம் பண்ணுபவன் பற்றி உமது கருத்து.

ப. சதியின் பதி.

★

என். எம். எஸ். ஹமீட் மன்னார்.

கே. நீர் நம்பி ஏமாந்திருக்கின்றீரா?

ப. மண்குதிரை என்ன மண் கழுதையை நம்பி ஆற்றில் இறங்கி உயிர் பிழைத்தவன் நான்.

வ. சிவமலர், பதுளை.

கே. உலகில் ஆண்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றார்கள்? பெண்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றார்கள்?

ப. ஆண்கள் உறங்கிக் கொண்டிருக்கின்றார்கள். பெண்கள் பிள்ளையை உறங்க வைக்க விழித்திருக்கிறார்கள்.

★

செல்வி உஷா நாகலிங்கம், நல்லூர்.

கே. மங்கல இசைஞர்களுக்கு சித்திரனில் உயர்ந்த பீடம் கொடுப்பதற்கு காரணம் என்ன?

ப. அவர்கள் மகேஸ்வரன் கலைஞர் அதேசமயம் மக்கள் கலைஞரும் கூட.

★

சு. திருநாவுக்கரசு, திருகோணமலை.

கே. இலங்கையில் இன்று பல தமிழ்ப்படங்கள் தயாராகின்றனவே... இவைபற்றி உமது கருத்து.

ப. வீணை வேந்தன் ராவணன் அமிர்தகானம் பொழிந்த நாட்டில் சாதனைகள் புரிவது சர்வ சாதாரணம் தம்பி.

★

மு. தேவதாசன், மருதானை.

கே. கலைஞனுக்கும் கொலைஞனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப. கலைஞன் குழலில் நாதஸ்வரத்தைக் கண்டு பிடித்தான்... கொலைஞன் குழலில் துப்பாக்கியைக் கண்டு பிடித்தான்.

★

எஸ். மரியாம்பிள்ளை, வவுனியா.

கே. குடிகாரனுக்கு இரத்த பாசம் உண்டா?

ப. அவர்கள் நரம்பில் இரத்தம் ஓடினால்தானே இரத்தபாசம் இருக்கும்... மதுவல்லவா ஓடுகிறது.

வ. தர்மசீலன், பரந்தன்.

கே. நம் நாட்டின் இன்றைய நிலை என்ன?

ப. இன்று எல்லோரும் சோஷலிஸம் பேசுகிறார்கள்... எல்லோரும் சோஷலிஸம் தான் எழுதுகிறார்கள். ஆனால் ஏழைகள் எல்லோரும் அழுதுகொண்டேயிருக்கிறார்கள்.

□

க. கனகராசா, திருகோணமலை.

கே. பண்பில்லாதவன் வீட்டில் விருந்துண்டால்.

ப. பந்தியில் உண்டதை சந்தியில் சொல்வான்.

□

எஸ். எம். கமால், கல்முனை.

கே மகுடியாரே நம்மவருக்கு டயரி எழுதும் பழக்கம் உண்டா?

ப. ஏனில்லை, டயரி வாங்கிய முதல் கிழமை தினமும் எழுதுவார்கள். இரண்டாம் கிழமை இரண்டு நாளுக்கொருக்கால் எழுதுவார்கள்... மூன்றும் கிழமை டயரியைத் தேடுவார்கள். நாலாங்கிழமை மறந்துவிடுவார்கள்.

□

க. கருணாகரன், கிளிநொச்சி.

கே. ஏழையின் கவலைக்கும் பணக்காரன் கவலைக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப. ஏழையின் கவலை விலை குறைந்த கவலை. பணக்காரன் கவலை விலை உயர்ந்த கவலை. ஏழை கவலையை மறப்பதற்கு கள்ளுக் குடிப்பான். பணக்காரன் கவலையை மறப்பதற்கு 'பிறண்டி' குடிப்பான்.

□

என்.எம்.அபூபக்கர் யாழ்ப்பாணம்

கே. மகுடியாரே அன்னிய நாடு போகும் உத்தேசமில்லையா?

ப. என்னை உயிருடன் வைத்திருக்கும் தண்ணீர், காற்று, வெளிச்சம் அத்தனையும் நம்நாட்டிலிருக்க அன்னியநாட்டில் அப்படி என்ன புதிதாக இருக்கும் என் உயிரைப் பிடித்துவைத்திருப்பதற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழ் தொடர்ச்சி



# சிரித்திரனுக்கு சிறப்பளித்த சிருஷ்டியாளர்கள்

### ❋ திக்குவல்லை கமால்

சிரித்திரன் சிறுகதைப் போட்டிகளில் பலவற்றில் பங்குபற்றி பரிசுகளை பெற்றவரான திக்குவல்லை கமாலின் சிறுகதைகள் மட்டுமல்ல 'புதுக்கவிதை'களும் சிரித்திரன் வாசகர்களால் பெரிதும் பாராட்டப்பட்டனவாகும்.

● [அன்புஜவஹர்ஷா, கோப்பாய்சிவம், மூதூர் முகைதீன், நீள்கரைநம்பி, பாலகிரி, பூநகர் மரியதாஸ், செந்திரன், லோகேந்திரலிங்கம், கலைவாதி கலீல்] சிரித்திரன் புதுக்கவிதைப் பூங்காவில் 'வாசகர்களுக்கு' புதுமை, மணம் கமழும் கவிமலர்களைப்படைத்த கவிஞர்கள் இளையதலைமுறையின் ஆர்வம் மிக்க படைப்பாளிகள்.

### ❋ சிவசக்தி - யமுனா பொன்னம்பலம்

கவி உணர்வும் - கலையழகும் ததும்பும் கவி, கதைகள் மூலம் வாசகர்களின் ஏகோபித்த பாராட்டுகளைப் பெற்றுவரும் பெண்கவிஞர்கள் பாரதி கண்ட புதுமைப் பெண்ணின் ' உணர்வுப் பொறிகள் ' இவர்கள் கவிதைகளில் நிறைந்திருக்கின்றன.

● [மா. சிவஞானவதி, சௌமினி, பைரவி] புதுமையும், கருத்தாழமும் கெகண்ட சிறுகதைகள் மூலம் வாசகர்களின் அபிமானத்தைப் பெற்ற இவ்விளம் பெண் சிருஷ்டியாளர்களிடமிருந்து ஈழத்திலக்கிய உலகம் நிறைய எதிர்பார்க்கின்றது.

### ❋ நவாலியூர் நா. சச்சிதானந்தன்

இசைப் பிரியரான சி. சச்சிதானந்தன் ஈழத்தின் தமிழகத்தில் இசைக்கலைஞர்களைப்பற்றி சிரித்திரனில் அவ்வப்போது அருமையாக எழுதிவருபவர், அத்துடன் பல நகைச்சுவைக் கதைகளை எழுதி சிரித்திரனூடாக மக்களை சிரிக்கவைத்தும் வருபவர்.

### ❋ நவாலியூர் நடேசன்

சிரித்திரன் வளர்ச்சியில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட இவர் எழுதிய லயஞான குபேரபூபதி தெட்சணாமூர்த்தியின் கட்டுரையொன்றே இவரது எழுத்தாற்றலுக்கு போதுமான சான்று.

● [சி. சண்முகம், எஸ்.ராம்தாஸ வரணியூரான்] நாடறிந்த வானொலிக் கலைஞர்களான இம்மூவரும் எழுதிய நகைச்சுவையோவியங்களை சிரித்திரன் வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

### ❋ ரி. எம். ஆர்.

இவர் அச்சுக்கோப்பாளராக கடமையாற்றியவர். அத்தோடு சிரித்திரனில் பல நகைச்சுவை காட்டூன்களையும் படைத்துள்ளார்.

சிரித்திரனின் வளர்ச்சிப் பாதையில் வரவேற்று, ஆதரவு தந்து, தங்கள் உயர்ந்த சிருஷ்டிகளின் மூலம் சிரித்திரனுக்கு சிறப்பளித்த படைப்பாளிகள் இன்னும் பலர் இருக்கிறார்கள் பெயர் குறிப்பிட்டு எழுதாவிட்டாலும், அவர்கள் அனைவரினதும் படைப்புக்கள் சிரித்திரனின் உயர்ச்சியின் ஆதாரங்கள். அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் தொடர்ந்தும் சிரித்திரனின் வலட்சியப் பாதையில் தோளோடு தோள் கொடுத்து முன்னேற அனைவரையும் அன்புடன் சிரித்திரன் அழைகின்றான்.

—சிரித்திரன்



## நிழல் கதை

ஈழத்தில் தமிழ்ச் சினிமாத்துறையில் ஓர் புதிய வேகம் ஏற்பட்டுள்ளது. பலர் இத்துறையில் காலடி எடுத்துவைத்துள்ளார்கள். இவர்களின் பாதையை செழுமையாக்கும் பொறுப்பு இந்நாட்டு எழுத்தாளர்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் அதிகமுண்டு, தமிழகத்தைப்போல வெறும் வியாபாரக் கேந்திரமாக சினிமாத்துறை மாறி கலை - கலாச்சாரச் சீரழிவுக்கு வழிவகுத்து மக்களை குழப்பத்திலாழ்த்தாது, தனித்துவமான, பண்பான சமுதாய வளர்ச்சிக்கும் சினிமாக்கலை பயன்படவேண்டுமென்பதே நமது அவா. சினிமாவின் மூலாதாரமான 'கதை' இன்றைய திரைக்கலைஞர்கள் முன்னுள்ள முதற்பிரச்சனை நல்ல கருத்தாளமும் கலையம்சமும், யதார்த்தப் பிரச்சனைகளை மையமாகக் கொண்டதுமான பண்பான கதைகளின் மூலம் சினிமா கலை மக்களுக்கு வழிகாட்டும் கருவியாக பயன்படமுடியும். சிரித்திரன் இந்த வகையில் நம் எழுத்தாளர்களுக்கும் - படத்தயாரிப்பாளர்களுக்கும் இடையே ஓர் இணைப்பை ஏற்படுத்தவுள்ளது. சிரித்திரன் 'பெப்ரவரி' இதழில் 'நிழல் கதை' என்ற ஓர் புதிய பகுதியை ஆரம்பிக்கவுள்ளது. திரைப்படத்திற்கான சிறந்த 'மூலக்கதை'யை சிரித்திரனில் ஒரு பக்கத்திற்குள் அடங்குமாறு கனமாக கச்சிதமாக எழுதியனுப்புங்கள். சிறந்தவற்றிற்கு சன்மானம் உண்டு. ஈழத் தமிழ்ப்பட வளர்ச்சிக்கு உங்கள் 'பங்களிப்பை' அளியுங்கள் பார்க்கலாம்

—ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுபவம் பேசுகிறது

### சி சண்முகம்

—o—

யாழ்ப்பாணத்துக்கு போகும் மெயில் வண்டி அனுராதபுரத்தினை நெருங்கிக் கொண்டிருக்கிறது. மாகலிங்கம் தன்னை மறந்து தூங்கிக் கொண்டிருக்கிறார். டிக்கெட் பரிசோதகர் வருகிறார். ''இஞ்சேருங்கோ" டிக்கெட்டாம். மனைவி கணவனைத் தட்டி எழுப்புகிறார் அவர் ''பொக்கெட்டுக்குள்'' இருந்து டிக்கெட்டை எடுத்துக் கொடுக்கிறார். பரிசோதகர் அவரை உற்றுப் பார்க்கிறார். ''என்னமான் இது'' டிக்கெட் சேர் அது இது யாழ்ப்பாண மெயில் வண்டி மான் 'தெரியும் சேர்' இந்த டிக்கெட் கோட்டையிலிருந்து வெள்ளவத்தைக்கு வாங்கின டிக்கெட் மான் மகாலிங்கம் வாய் திறக்கவில்லை. ஒவ்வொரு நாளும் கோட்டையிலிருந்து வெள்ளவத்தைக்கு டிக்கெட் வாங்கிய பழக்கத்தில் யாழ்ப்பாணம் போவதற்கு டிக்கெட் வாங்க வேண்டிய மகாலிங்கம் மறந்து போய் வெள்ளவத்தைக்கு டிக்கெட் வாங்கிவிட்டார். !!!!!

## அனுபவம் பேசுகிறது

—o—

அது ஒரு பஸ் ஸ்ராண்ட். கண்ணிலே கூலிங் கிளாஸ்... கையிலே டம்பப் பை. நவநாகரீக நங்கை அவள். வெகு நேரமாகப் பஸ்ஸுக்கு அவள் காத்து நிற்கிறாள். பெல் பொட்டம் அடித்து சடை வளர்த்த ஒருவர் அங்கு வருகிறார். பக்கத்தில் நிற்கிறார். ஐயா பசிக்குது ஐயா பெல் பொட்டம் மங்கையின் பக்கம் கண்களைச் செலுத்துகிறது அவளின் வாயின் கடைக்கோடியில் புன்சிரிப்பு... பெல் பொட்டமும் சிரிக்கிறது... பாக்கெட்டுக்குள் கையை விட்டு பத்து சதத்தை நீட்டிய கையில் விட்டெறிகிறது பிச்சைக்காரப் பையன் அவ்விடத்தை விட்டு விலகிறான். ஐயா பிச்சை... மற்றொரு குரல்... பெல் பொட்டத்தின் கண்கள் மங்கையை மேய்கின்றன. நங்கை புன்னகை சிந்த பெல் பொட்டம் மற்றொரு பத்துச் சதத்தை விட்டெறிந்து பாவம் சின்னப் பையன் யேஸ் பாவம் . . . வார்த்தைகள் பரிமாறப்படுகின்றன மீண்டும் ஒரு குரல் — பெண்ணின் குரல் மீண்டும் பத்துச் சதம்... பஸ் வருகிறது நாகரீக நங்கை பஸ்ஸில் ஏறுகிறாள் பஸ் போகிறது பெல் பொட்டம் பேமண்டில் நிற்கிறது அந்தப் பஸ்ஸில் ஏறி மங்கையின் பின்னால் போயிருக்கலாமே பாவம் பெல் பொட்டத்திடம் இருந்து முப்பது சதமும் வெறும் புன்முவலுக்காக தத்தம் செய்யப்பட்டு விட்டதே பெல் பொட்டம் நிற்கிறது பேமண்டில் நடந்து செல்கிறது.

## ம. பொ. சியின் ஐந்து வருடத் திட்டம்

ஒரு பிள்ளையைப் பெற்றால் நாம் ஐந்து வருடம் சென்றே அடுத்த குழந்தையைப் பெற வேண்டும், ஏனென்றால் முதல் பெற்ற குழந்தை உருண்டு தவழ்ந்து வளர்ந்து ஐந்து வயதைக் கடக்கும் போது பள்ளிக்குப் போகத் தொடங்குகிறது அடுத்த குழந்தையை அப்போ பெற்றோமானால் முதற் குழந்தையின் எதிர்காலம் பாதிக்கப்படாது. அதைவிட்டு பிறந்த குழந்தை தவழும் போதே தாய் அடுத்த குழந்தைக்குத் தாயாகி விடுவதையே நாம் காணுகிறோம்.

குடும்பக்கட்டுப் பாட்டுப் பிரசுரம்.

## யெகுடி ★ மெனுஹின்

❋

● அரசாங்க அழைப்பின் பேரில் முதன் முதலாக ரஷ்யா சென்று இசைநிகழ்ச்சி நடாத்திய அமெரிக்க இசைக் கலைஞர் ''யெகுடி மெனுஹின்" அவர்களே மாஸ்கோவில் நடைபெற்ற அவரது கச்சேரிக்கு 'டிக்கெட்' வாங்க பன்னிரெண்டு மணிநேரம் ருஷ்யமக்கள் கியூவில் நின்றனர்.

● நேருஜின் அழைப்பின் பேரில் பாரதத்திற்கு 1952 ல் விஜயம் செய்த இவ் விசைமேதை தனது நிகழ்ச்சிகளின் மூலம் பிரதமரின் நிவாரண நிதிக்கு சுமார் 3 லட்சத்திற்கு அதிகமாக திரட்டிக் கொடுத்தார்.

● மேல் நாட்டு இசை மேதையாகிய இவருக்கு ஹிதுஸ்தானி சாஸ்திரீய ஞானமும் அதிகமுள்ள சித்தார் மேதை ரவிசங்கரே இவருடைய குரு ரவிசங்கருடன் இவர் இணைந்து வாசித்துள்ள சில ராகங்களின் இசைத் தட்டுகள் வெளி வந்த ஒரு வாரத்திற்குள் 15000க் மேல் விற்பனையாகி ஒரு சாதனையை ஏற்படுத்தியது.

● இசைக்கு அடுத்தபடியாக இவர் விரும்பும் கலை யோகாசனக் கலையாகும் யோகக் கலைபற்றி இவரது குருவான பி. கே. எஸ். அய்யங்கார் என்பவர் எழுதிய நூலுக்கு இவரே முன்னுரை வழங்கினார்.

● இந்து மதத்துவங்களில் ஆழ்ந்த ஈடுபாடு மிக்க இவ் இசை அடிக்கடி கூறுவது.

''நடப்பது நடந்தே தீரும் எதையும் சந்தோஷமாக ஏற்று அனுபவிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் பொங்கி எழுவான் என்றே எதிர் பார்த்தேன். அவன் பொங்கவும் இல்லை எழுவும் இல்லை, சர்வ சாதாரணமாகத் தான் நின்றான்.

''மூணு ரூபாய் தாறிங்களா? பெருமாயின் கேள்வி என்னை திக்கு முக்காட வைத்தது' அந்த விறகை கொத்த நியாயமன கூலியாக ஐந்து ரூபாய் கொடுக்கலாம்.

அம்மா இரண்டு ரூபாயில் இருந்து இறங்கி ஏறவில்லை. பாவம் அவன் தான் அம்மாவின் மேல் இரங்கி, கேட்ட கூலியில் இருந்து இறங்கினான்.

''பெருமாளோ!!''

''பார்த்தா தெரியல்ல...''

''தெரியுது'' அவன் கொத்துக் கட்டைகளை துண்டுபோட்டுக் கொண்டிருந்த போது... எங்கள் இரண்டாவது வீட்டு பொன்னம்மா ஆச்சி குறுக்கிட்டாள்.

''என்ன பார்க்கிறீங்க'' ஒரே பதிலுடன் போட்டிருந்த பெனியனை அரையடிக்கு இழுத்துக் கொண்டே கொள்ளித் துண்டொன்றினை தூக்கிப் போட்டான்.

''உனக்கென்ன செல்லப் பிள்ளை மூணு பிள்ளைகளுக்கு கலியாணம் செய்து வைச்சிட்டாய் இப்ப இருக்கிறது ஒரே ஒரு பெடியன். திரியாவில இருப்பாய் பிறகு கன்னியாவில வயல் செய்வாய், பிறகு... கோடாலிய தூக்கிக் கொண்டும் திரிவாய், ஏன் இப்ப கிணறு வெட்டப் போறதில்லையோ?''

பொன்னம்மா ஆச்சி, திரியாயில் தன் மகளுடன் வாழ்த்த காலத்தில் பெருமாளை நன்றாக தெரிந்து வைத்திருந்தாள், அவனும் மேலோட்டமாகத்தான் அறிந்திருந்தான்.

''ஏன் போறதில்லை, என் நாற்பத்தாறு வயசில முப்பத்தாறு கிணறு முழுசா வெட்டி பாசாகி இருக்கேன். எனக்கு என்ன வேல தெரியாது?

''நீய் நல்லாய் கதைப்பாய் ஏன் வெள்ளிக் கிழமை படம் ஓடுதே பார்க்கல்லையா? ஆச்சியோடு நானும் சேர்ந்து கொண்டேன்.



மனைவி:- இந்தாருங்கள் இந்தப் பூனையை அடித்து விரட்டுங்கள் அபசகுனம் பிடித்தது.

கணவன்:- இந்தாடி இந்த வீட்டிலே மீசை உள்ளது அது ஒன்றுதான் இருக்கிறது அதையும் விரட்டிவிடாதே.

எஸ். பி. கௌரி

அவனின் அவதி அப்போது எனக்குத் தெரியவில்லை விளையாட்டாகவே கேட்ட பின்னரே அதை உணர்ந்தேன் ஐந்து தரம் கோடாலியை - நிமிர்ந்து தூக்கிப் போட்டால், உள்ள உடலின் நிலை என்னை மௌனமாக்கியது. ஆனால் அவனோ?

''என்ன தம்பி... நாம படம் பார்க்க கூடாதா? இன்னைக்கு உழைச்சால் சாப்பிடுவேன். படமும்பார்ப்பேன். நாளைக்கு காசை பூட்டி வைக்க என்னட்ட பெட்டியும் இல்ல... வீடும் இல்ல என்னை என்ன நினைச்சிங்க...

என் குல தொழில் கொள்ளி கொத்துறது இத விடப்பிடாது என்றுதான் இத செய்யிறன் என்னட்ட வண்டில் இருக்கு, மாடு நாலு இருக்கு, திரியாவில ஆறு ஏக்கர் காடு வெட்டி இருக்கேன் கன்னியாவில மூணு ஏக்கர் வெள்ளாமை தரையும் அரை ஏக்கர் வெங்காய சேனையும் இருக்கு, தண்ணியூத்தில பெரிய காணி இருக்கு மா, பலா, தென்னை,

புது வண்ணங்களிலான
புதுமைப் புடைவைகளுக்கு
சிங்காரம்ஸ்
நங்கையர் நாடும்
நவநாகரீக நகைகளுக்கு
டைமா
நகை மாளிகை
47, செட்டியார் தெரு,
கொழும்பு.
தொலைபேசி: 20375

**கலைஞன்**

ஒரு சிறந்த கலைஞன் சென்ற காலத்தை விளங்கிக்கொள்ள வேண்டும் நிகழ்காலத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் எதிர்காலத்தை ஊடுருவிப்பார்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✻ சிறு கதை

# ஒரு மாற்றம்

— திருமலை சுந்தா

''இன்னிக்கு நாலு ரூபாய் கடன் ...'' பெருமாள் அலுத்துக் கொண்டு என் பக்கத்தில் அமர்ந்தான். அவனது கண்கள் அரைத் தூக்கத்தில் சாய்ந்து, நிமிர்ந்து விழித்து மூடிக்கொண்டிருந்தன. தனது சட்டைப் பொக்கற்றுக்குள் இருந்த வெற்றிலைச் சுருளை எடுத்து - மணலில் விரித்திருந்த தன் ஊற்றைச் சாரத்தின் மேல் விரித்து - பச்சைப் பாக்கு துண்டொன்றினை, சிவப்பேறிய வாய்க்குள் செலுத்திக் கொண்டே இடது காலினையும் சொறிந்து கொள்ளலானான்.

ஒரு நாள் பெய்த மழை வெள்ளத்தினால்... நாம் அமர்ந்திருந்த அந்த முற்றத்து மணல் பரப்பும், கடற்கரை மணல் போலவே வெளுத்திருந்தது.

''என்னைய்சே... உமக்கு நாலு ரூபா கடனே? இன்றைக்கு நல்லா வியோ போத்தல் கள்ளு போட்டிருக்கிறீர். போல ...'' பெருமாளின் நாளாந்த சீவியத்தில் ஏற்பட்டிராத அவனின் இன்றைய உடல் அங்கங்களின் மாற்றம் ஒரு கேள்வியை அவனிடம் கேட்க என்னை தூண்டியபோது

''என்னங்க சொன்னீங்க... நானு குடிச்சேனு? என் கண்ணு உங்கள ஏமாற்றிப் போச்சு பார்த்தீங்களா? வாயைத் திறந்து என் அருகே கொண்டு வந்தான். நான் தலையை பின்னால் எடுத்தேன்,

''ஏன் பயப்படுறீங்க'' நல்லா வாயை மணந்து பாருங்களேன். நான் குடிச்சா இருக்கிறேன் இந்தா பாருங்க இந்த வெற்றிலை பாக்கு பழக்கமொன்றுதான் என் கெட்ட. பழக்கம். நல்லா குளிர் அடிச்சா, பீடியும் இழுப்பேன். பாருங்க நான் இப்ப பட்டிருக்கிற கடன், என் உடம்பை கெடுக்கிறதுக்குள்ளே! என் மனிசிக்கு..., தன் அரைக் கண்களை அகல விரித்து, காவியேறிய சிவந்த உதடுகளை பற்களால் கடித்துக் கொண்டே என்னை உற்று நோக்கினான்.

குதப்பிய வெற்றிலைச் சாயம் அவன் வயிற்றுக்குள் போகாது அருகே இருந்த வாழைப் பாத்தியின் கருமணலை சிவப்பாக்கியது ''இத'' இவனிட்ட ஏன் கேட்டம் இதோட விடமாட்டானே'' நான் வாய்க்குள் போட்டு உரசிக் கொண்டது அவனுக்கு கேட்டிராது. ஆனாலும் அவன் என் கேள்விக்கு உருவகம் கொடுத்த போது என்னால் பேசவும் முடியவில்லை. மெல்ல அகலவும் முடியவில்லை.

யார் இந்த பெருமாள் ?
என்னுட ன்எப்படி அறிமுகமானான் ?

''கொள்ளி கொத்தனுமென்னு அம்மா சொன்னாங்களே. கூப்பிடுங்க, இருக்கிற மொக்கு விறகுகள் எல்லாத்தையும் இதில குமியுங்க.''

ஒரு மாதத்துக்கு முன்னால் இதே கோலத்துடன் தான் பெருமாள் என்னுடன் அறிமுகமானான்

கட்டி இறுகிய அவனது உடல் கட்டை காணமுடியாதவாறு ஆறு வருஷத்துக்கு முத்தி வரப்பிரகாசம் கடையில, நாற்பத்தியாறு ரூபாவுக்கு விற்ற நைலோன் சேட் மறைத்திருந்தது தோளில் ஐந்து அங்குல அகலத்தில் மூன்றடி நீளக் கம்பளித்துண்டொன்று கழுத்தினைச் சுற்றியிருந்தது. அழுக்கேறிய பச்சை வரிச் சாரத்தில் திக்கு - திக்காய் ஊற்றைகள் பொட்டிட்டிருந்தன சட்டைப் பொக்கற்றுக்குள்... வெற்றிலைச் சுருள் - ஒரு பழைய சீப்பு - பழைய சினிமா பாடல் புத்தகம்.

நல்ல நீளமான எட்டு விறகு கட்டைகளை ஒரு இடத்தில் குமித்தேன். அவன் என் அம்மாவுடன் அதைக் கொத்துவதற்கு பேரம் பேசினான்.

''ஆறு ரூபாய் தாங்க'' நல்ல அளவாய், அடுப்புக்கு வைக்கச் சின்னதாய், உங்க மனம் பிடிச்சாப் போல கொத்திக் குடுப்பேன். கொத்தி முடிச்சப்புறம் தான் காச கொடுங்க ''

''இதுக்கா ! பக்கத்து வீட்டில இரட்டை மாட்டு வண்டில் விறகைக் கொத்த ஏழு ரூபாய் வாங்கி இருக்கிறாய். இதுக்கு ? ஒரு வண்டிலும் இருக்காதே, இரண்டு ரூபாய் தரட்டா...''

அம்மா சொன்னது என் நெஞ்சைத் துளைத்தது. அவன் என்ன மனிசனா, மிருகமா ? ? ஒரு நியாயமாக கேட்க வேண்டாம் ?'

**செய்தித் தாள்**

அமெரிக்காவில் காது ( EAR ) என்ற பெயருடன் பத்திரிகை ஒன்று பிரசுரமாகின்றது காதில் விழும் செய்திகளை அதில் அப்படியே அச்சிடுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழை, கமுகு எல்லாம் இருக்கு அதோட செத்த உப்புவெளி சேமன்ர பெற்ருேல் செற்வயல் இருக்கே, வானம் பார்த்த பூமி, அதையும் நான் தான் எடுத்திருக்கேன், தன்னை பெருமையாக பெருமாள் சொன்ஞன்.

''வீடு இல்லை என்றீர், இப்ப எல்லாம் இருக்கே. இதுகள விட்டுட்டு நீர் ஏன் கொள்ளி கொத்தி கஷ்டப்பட வேணும்?''

என் மௌனம் கலைந்தது,

பெருமாள் கோடாரியைத் தூக்கி, சிரித்தபடி கொத்தித் துண்டொன்றில் போட்டபடி பதில் சொன்ஞன்.

''தம்பி... கஷ்டப்பட்டு உடம்பை வளைச்சுப் பார்க்கணும் அப்பதான் அதில இருக்குதே ஒரு சுதி... இதில வர்ர சுகம் இருக்கே ஆகா... இதே தேசத்துக்கு அது தான் பலத்தையும் கொடுக்குது நீங்க படிச்சுப் போட்டு காற் சட்டை உத்தியோகத்திக்கு அர சாங்கத்தோட சண்டை பிடிக்கி றீங்க... நாங்க ஆரோட பிடிக்கிறது?

இது இருக்கட்டும் என்னட்ட எல்லாம் இருக்கு என்று சொன்னேனே! இதுகள் எல்லாம் இப்ப என்னட்ட இல்லை. என் மவன், மருமக்கள் எல்லோரும் பங்கிட்டு எடுத்திட்டானுக, நானும் அவங்களுக்கு ஒரு தொழிலை காட்டிட்டேன். இனி அவங்களோட இருக்கிறது சரியில்ல பாருங்க. இஞ்ச சிவபுரி ஒழுங்கைக்குள்ள என் கூட்டாளி சாமித்தம்பி இருக்கான், அவன் வீட்ட தான் படுக்கிறன். தண்ணி ஊற்று காணி இருக்குது என்றேனே, அதில இப்ப இந்த சாமித்தம்பியோட மைச்சுனன் தான் இருக்கான். நான் குத்தகையோ... கூலியோ வேண்டுறது இல்ல"

''சில வேளை சாமித்தம்பியின் மைத்துனன் அந்த காணியை சொந்தங் கொண்டாடி... உமக்கு தரமாட்டேன் என்று சொல்லி விட்டால்''



அந்தப் பணக்காரருக்கு ஒரே யொரு கவலே.

என்ன கவலை

அயலவர்கள் எல்லோருமே பணக்காரர்களாக இருக்கின்ருர்களே யென்ற கவலே.

—திக்கவயல்

''சொல்லிப்பிட்டால் விடுறது என்ன இதில அவன் எட்டு பிள்ளை குட்டிக்காரன். நானென்ன கொண்டா வந்தன் சொந்தம் கொண்டாட''

பெருமாளின் பதில்கள் எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது ''இப்படியும் ஒருவனு? என்னுள் தலையெடுத்த சிறுமை என்னையே தலைகுனிய வைத்தது, பெருமாளைப் பார்த்தேன்.

அவன் இன்னமும் வெற்றிலையினை குதம்பிக் கொண்டே இருந்தான், அவனின் முகத்தில் ஓராயிரம் கேள்விகள் சுழலுவது போன்ற பிரமை என் நா எழ மறுத்தது.

''தம்பி... கேட்டுப்பிட்டு சும்மா இருக்கிறீங்களே... என் மனிசி என்றேனே! அவ நேற்று பின்னேரமா நாவலப் பிட்டியில இருந்து வந்துட்டா... தனிக்கட்டையென்ரு எங்கவும் படுககலாம் ஆனுல், சாமித்தம்பி வீட்ட தான் இப்ப இருக்கம் மூனுநாளில வீடு கூலிக்கு எடுத்திட்டு விடுறதாய் சொல்லியும் போட்டேன்.

எனக்கு ஒரே தடுமாற்றமாய் இருந்தது, கன்னியகவில் பெண்சாதி பிள்ளைகள் இருக்குதுகள் என்று சொன்ன பெருமாள்... நாவலப் பிட்டியால மனிசி வந்திருக்கென்று சொல்வதென்ருல்...

''என்ன உமக்கு இரண்டு மனிசியா?'' சந்தர்ப்பம் என்னை தட்டியெழுப்பியது.

''ஆமா நான் இரண்டு பெண்சாதிக்காரன். மூத்தவக்கு இந்த விஷயம் தெரியாது, இவக்கு மூணு வயசில ஒரு குழந்தை இருக்குது. இதுக்கு தான் கிளாக்கர் வீட்டில நாலு ரூபாய் கடன் பட்டு பாண் வாங்கிக் கொண்டு போனேன்."

எனக்கு எல்லா விஷயங்களும் விழங்கின.

அவனுக்கு பிரச்சனை யொன்று கூடி விட்டது.

''என்ன நாலு இருத்தல் பாணு? அவன் அவன்ர மனிசி மூன்று வயது பிள்ளை... இந்த குடும்ப எண்ணிக்கைக்கு அவன் சொன்ன பாண் இருத்தல் கணக்கு பொய்யக இருக்குமோ என்ற எண்ணத்தில்தான் பெரிய பிழை கண்டு பிடித்து விட்டதாகக் கேட்டேன்.

வீட்டுக் கூரையில் நின்று கொக்கரித்த சேவலொன்று என் தலைக்கு மேலால் பறந்து படுத்திருந்த நாய்க்கு உசார் கொடுத்தது. நாய் அதைத் திரத்த... வீட்டுக்குள் இருந்து அம்மா வெளியே ஓடி வந்தாள்,

''என்ன... அங்க நீங்க பார்த்தா... கோழிய நாய் பிடிக்காது நான் சொல்லுறதை கேளுங்க வன் சாமித்தம்பி பிள்ளை குட்டிக்காரன் நாலு பெண்பிள்ளைகளும் இரண்டு ஆண் பெடியன்களும் இருக்கு எல்லாம் சின்னதுகள்? இதுக வாய் பார்க்க நாம சாப்பிடலாமா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**12-ம் பக்க தொடர்ச்சி**

அம்மா சேவலே படாத பாடு பட்டு பிடித்துக் கொண்டு வந்தாள் நான் மணல் மீது கால்களினை நீட்டி முதுகினை சரித்துக் கொண்டேன் பெருமாள் சொன்னது நியாயமாகவே பட்டது.

''தம்பி... என்னை நம்பி வந்தவையும் என்னால விட முடியாது அதுதான் தம்பி...'

''என்ன'' பெருமாள் ஏதோ வொன்றுக்குத் தான் அடித்தளம் போடுகின்றான் என்பது என் அம்மாவுக்கு எப்படி தெரிந்தது? பெருமாளை முறைத்துப் பார்த்து விட்டே கோழிக் கூட்டடி நடந்தாள்.

பெருமாள் இரகசியமாகவே கேட்டான்.

''ஒரு பத்து ரூபா கடனு தாறீங்களா? புது ஊடு எடுக்க நீங்க பயப்படாதேங்க, நான் கோடாலிய தூக்கினன் என்றால் மூணு நாளு தான், அதுக்குல தந்திடுவன் நம்ம பக்கத்து வீட்டு பொன்னம்மா ஆச்சி ஊட்ட தான் பதினைஞ்சு ரூபா வாடகை ''பொன்னம்மா ஆச்சி வீட்டையா?

பொன்னம்மா ஆச்சி கொஞ்சம் முந்தி என் அம்மாவோடு கதைத்தது எனக்கு ஞாபகத்துக்கு வந்தது கோழிக் கூட்டடிக்குப் போன அம்மா காலைக் கழுவ கிணற்றடி நோக்கிப் போவது எனக்கு தெரிந்தது.

''பிள்ளை... இவன் பெருமாள் கேட்கிறான் என்னன்டு வீட்ட குடுக்கிறது? அங்க நாலைஞ்சு குமருகள் இருக்கு. அதோட இவன் எங்க வாடகை தரப்போறான்? கோடிக்க ஒரு பெரிய மொக்குக் கட்டை கிடந்தது. அதை கொத்தவே ஏலாது அதை கொத்துறதுக்காக என்று சும்மா அவன் கேட்டதுக்கு ஓமென்றிட்டன் வந்தா... திரியாவில இருக்கிற மகளிட்ட கேட்டிட்டு தாறதாய் சொல்லுவம் சரிதானே!!''

''அதுதானே பார்த்தன் அவனுக்கு ஆச்சி நீ விட்டை கொடுத்தா உன்ர மோள் பெட்டைகள் சும்மா விடுவாளுகளோ வாடைக்கு கொடுத்து நீ உழைக்கிறாய் என்று பிச்சுத் தின்று போடுவாளவை.''

பெருமாள் கெஞ்சல் பார்வையோடு என்னை கூர்ந்து பார்த்தான் அவனது வேகம் பத்து ரூபாயில் இருந்தது.

பின்னால் இருக்கின்ற நீண்ட ஒரு சமுதாயத்தின் மனப் போக்கின் மாறல்களை அவனால் எப்படி உணர்ந்து கொள்ள முடியும். அவன் வாழ்ந்த சமூகம் வேறு இனி வாழப் போற சமூகம் வேறு அவனது நினைவுகளும் நினைப்புகளும் போராடித்தான் வெல்ல வேண்டும். வேற வழி?

என்னுள் ஏதோ வொரு வேகம் இது எதனால் உண்டானதென்றே தெரியவில்லை. சேட் வாங்க அய்யா தந்திருந்த... பச்சை நோட்டுகள் நினைவில் வந்தன.

அம்மா-கிணற்றடியால் நாங்கள் அமர்ந்திருக்கும் முற்றத்துக்கு வந்தாள் அவள் முகத்தில் ஏதோவொரு எரிவு.

''உனக்கென்னடா... வேற வேலையள் ஏதும் இல்லையோ! இவனோட கதைச்சுக் கொண்டு நிக்கிறாய். ரியூசனுக்கு பெடியன் வார நேராச்சு... போய் முகத்தை கழுவன்...'' அம்மா என் வேலையை ஞாபகப்படுத்தி விட்டு நகர்ந்தாள்.

வெளிக் கதவு திறபடும் சாயல்... மாடு ஒன்று எட்டிப் பார்த்தது, என்னட்ட ரியூசன் எடுக்கிற பெடியன் மாட்டை அதட்டி விட்டு வருவது தெரிந்தது.
நான் எழுந்து கொண்டேன்.
பெருமாளும் எழுந்து கொண்டான்.
அவன் முகத்தில் ...

நிமிர்ந்து அம்மா இருக்கிறாளா என்று தலையை நிமிர்த்திப் பார்த்து விட்டு ... ''பெருமாள் பின்னேரம் வா பத்து ரூபாய்தாரன் எங்கை யெண்டாலும் வீட்டைப் பார்த்து எடு.''
பெருமாள் நன்றியோடு பார்த்தான்.

ஆனால், இனித்தான் அவன் நன்றியில்லாத நாய்களை கண் முன்னால் காணப் போகின்றானே!

எழுந்து அவன் நின்று நடந்ததை உன்னிப்பாகவே பார்த்தேன். என் அம்மா வீட்டு விறாந்தைக்குள் நிற்பது எனக்கு தெரிந்தது என்னிடம் ரியூசன் எடுக்கும் மற்றப் பெடியனின் குரலும் கேட்டது.


பாலாடையிலும் வெண்மையாக உங்கள் நூலாடைகளை மிளிரச் செய்வது....
மில்க் வைற் சலவைப்பவுடர்
மில்க் வைற் சோப் வகைகள்
|
தயாரிப்பாளர்.
மில்க்வைற்சோப் தொழிற்சாலை


காங்கேசன்துறை வீதி — யாழ்ப்பாணம்
கிளை: 79, மெசஞ்சர் வீதி, கொழும்பு - 11




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்பனா

## கற்பனைச் செய்திகள்

**சவாரி போவோம் சலோ... சலோ**

● ஏராளமான லேடீஸ் சைக்கிள்கள் யாழ்ப்பாணத்தில் வந்து குவிகின்றன. அன்ன நடையில் அசைந்த பெண்கள் இன்று சிட்டுக் குருவிகள் போன்று சைக்கிளில் பறக்கின்றார்கள். யாழ்ப்பாணத்தில் சைக்கிள் ஓடும் பெண்கள் தொகை கூடிக்கொண்டு போகின்றது.

**பாம்புகள் படையெடுப்பு**

● யாழ்ப்பாணத்தில் பாம்புகள் பெருகுகின்றன ஆண்பிள்ளைகள் இல்லை பாம்பு அடிப்பதற்கு ஆண்கள் எல்லோரும் அந்நிய தேசங்களுக்கு வேலை வாய்ப்பு தேடிப் போய் விட்டார்கள் போய்க் கொண்டுமிருக்கிறார்கள்.

**பாலம் நோயாளிகள்**

● இப்பொழுதெல்லாம் மெடிக்கல் சேர்ட்டிபிக்கற் கொடுத்தால் தான் 'விட்டாமோல்ட்' பால்மா கூட்டுறவுச்சங்கத்தில் பெற்றுக் கொள்ள முடிகிறது, இந்த விநியோக முறை வந்த பின்னர் நோயாளிகள் 'விட்டாமோல்ட்' கிடையாது மிகவும் கஷ்டப்படுகிறார்களாம் !

**நவீன கூடம்**

● நவீன சந்தையில் காதல் ஜோடிகளின் நடமாட்டம் வியாபாரத்தைப் பாதிப்பதால் வர்த்தக சங்கம் காதலர் கூடிப் பேசுவதற்கு காதலர் கூடம் ஒன்று நிறுவ இருக்கின்றது.

யாழ்ப்பாணத்தவர்க்கு

**ஒரு நற்செய்தி....**

● கிடுகுகளாலான வேலிகள் உக்கி சிதைவதால் ஒருஸ்தாபனம் பிளாஸ்டிக் வேலிகள் தயாரிப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது

**விபத்தின் பின்**

● யாழ்ப்பாணம் பண்ணைப் பாலத்தில் நடந்த பஸ் விபத்தின் பின் அநேகமானோர் கால் நடையாகவே பாலத்தின் வழியாகப் போகின்றார்கள் ஆகையால் அவ்வழிசெல்லும் பஸ்கள் அநேகமாகக் காலியாகவே காட்சியளிக்கின்றன



தந்தை: எங்கப் போட் வருகிறாய் ?
மகன்: வகுப்பிற்கு போட்டு
தந்தை: பொய் பேசாதை உன்னைப் படமாளிகைக்குள்பார்த்ததாக ஒருவர் சொன்னார்?
மகன்; உண்மைதான் மூண்டாம் வகுப்பில் பார்த்திருப்பார்


**ஆயிரக்கணக்கான சிரித்திரன் வாசகர்களை வருடக்கணக்கில் சிரிக்கவைத்துக் கொண்டிருந்த மலைநாட்டு கதாபாத்திரம்**

## "ஒய்யப் பங்கங்காணியார்"

**"குறிஞ்சிதாசனின்"** கதை, வசனம், டைரக்‌ஷனில் வெகு விரைவில் மலையகமெங்கும் நாடகமாக மேடையேறப் போகிறார்.

ஒய்யப்பங்கங்காணியார் நாடகத்தை யாழ்ப்பாணத்திலோ அன்றி அதனை சார்ந்த ஊர்களிலோ மேடையேற்ற விரும்பும் மன்றங்களோ, குழுவினர்களோ, தனிநபர்களோ தயவு செய்து பின்வரும் விலாசத்தாரோடு தொடர்பு கொண்டு விபரங்களை பெறலாம்.

**பி. எஸ். அருள்ராஜ்**
(கௌரவ பொதுச் செயலாளர்)
"எக்ஸிஸ்டர்ஸ்" கலை குழுவினர்,
18 A, சவுத்லேன்
பதுளை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற
கூறைச் சேலைவகைகள்
சூட்டிங் துணிகள்
முதலியவற்றை
சிறந்தமுறையில்
தெரிவுசெய்ய

## லிங்கம்ஸ் சில்க் ஹவுஸ்

18, மக்கள் நவீன சந்தை, யாழ்ப்பாணம்
இறக்குமதி செய்யப்பெற்ற
ஜில் காற்சட்டை
வகைகளுக்கு
பெயர்பெற்ற ஸ்தாபனம்

போன்:
7684

திரு நாட்கள்
திருவிழாக்கள்
திருமணங்கள்........
சகல மங்களகரமான
வைபவங்களுக்கு கேற்ற ஆடவர்.
வனிதையர் குழந்தைகள்
அனைவர்க்கும் உகந்த
ஜவுளித் தினிசுகள் அழகு
சாதனப் பொருட்கள்
அனைத்தினதும் மணிமணியான
தேர்வுக்கு...

## மணியம்ஸ்

16, நவீன சந்தை — யாழ்ப்பாணம்.
தொலைபேசி 7545

## MANIAMS

16, MODERN MARKET JAFFNA.
TELEPHONE 7545

விளையாடித் திரிந்த உனக்கு
எப்படி அட்வான்ஸ் லெவல்
பரீட்சையில் விசேஷ சித்தி
கிடைத்தது?

● 'பிளாஸ்க்'கில் அண்ணா
கோப்பி வைத்து குடித்துக்
குடித்து பரீட்சை எழுதின
னன்.

## அண்ணா கோப்பி

அண்ணா தொழிலகம்
இணுவில்

வீடுபோற் சொர்க்கம் வேறில்லை
வீட்டைச்சொர்க்கம்போல்
விளங்கவைப்பது தளபாடங்களே

உங்கள் இல்லங்களுக்கு
எழிலூட்டும் நவீன உயர்தர
தளபாட வகைகளுக்கு

## சிவா பேணிச்சர்

மொம்சாக் கட்டிடம்
11/5 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாயம் தானா? ★

யாழ்ப்பாணம் கச்சேரியில் சிருப்பராய் வேலை பார்த்த மயிலுப்பிள்ளை சிருப்பர் அவர்கள் நாள் தோறும் பஞ்சாங்கம் பார்த்த பின் மருதனு மடத்தில் இருந்து ஒற்றை மாட்டு திருக்கையில்தான் கச்சேரி போவது வழக்கம். பயிர், பட்டை, வேலிவிராய், எல்லாம் மேற்பார்வை இட்டு அதன்பின்னர் கச்சேரிக்கு போகும் சிருப்பர் அவர்கள் சற்று தாமதமாய் தான் போவார் என்பதை நாம் அறிந்து உணர்ந்து. அத்துடன் பிந்தித்தான் போவது என்பது எமது தமிழர்களின் சிறப்பான குணம் என்பதை நாம் பெரும் தன்மையுடன் ஒத்துக் கொண்டாலும் ஆங்கிலேய கோர்ன மேந்து எச்சன்ட (GOVERMENT AGENT) அதை விரும்பமாட்டார் என்பதையும் நாம் ஒத்துக் கொள்ளத்தானே வேண்டும்.

சரி! அது எப்படி போனாலும் அந்த ஆங்கிலேய அதிகாரி தாராள மனத்துடன் ஓர் குதிரையை கொடுத்து [ இப்போதும் யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் குதிரைகளின் முப்பாட்டனாரின் சிறிய தாயின் சம்மந்தி வளி குதிரைதான் அக் குதிரையாய் இருக்க வேண்டும் என்று மேற்கு ஜேர்மனி வாழ் தமிழர்கள் ஏக மனதாக ஒத்துக்கொகண்டுள்ளனர் ] இனி மேல் பிந்தி வர வேண்டாம் என்று கூறினார். அட கஸ்ரகாலமே இந்த ஆங்கிலேயனுக்கு எப்பவும் அவசரபுத்தியும், முட்டாள் புத்தியும் தான், சிருப்பருக்கு குதிரையை கொடுத்தால் என்ன றேக்கட்டை கொடுத்தால் என்ன, அவர் வெள்ளாப்பிலை எழும்பி மிளகாய் நாத்துக்கு உச்சித் தண்ணீர் வார்த்து, புகையிலை கன்றுக்கு கெட்டு எடுத்து அதன் பின்தானே அவர் கச்சேரிக்கு போக முடியும். என்னை பொறுத்த அளவில் இப்போது சிருப்பருக்கு தான், மஜோறிட்டி அவர் பிந்தி போகலாம், அதில் ஞாயமும் உண்டு. குதிரையில் பிந்தி போன சிருப்பரை கச்சேரி வாசலில் ஆத்திரத்துடன காத்து நின்ற ஆங்கிலேய அதிகாரி WHY ARE YOU FOOL LATE என்றுனே பார்க்கலாம், வந்த தே கோபம் சிருப்பருக்கு, சிருப்பர் என்ன சாமானியமான ஆளா. அல்லது "செக்குறிட்டி" கட்டாமல் வேலைக்கு சேர்ந்த ஆளா? அல்லது இலஞ்சம் கொடுத்து வேலைக்கு சேர்ந்த ஆளா? அல்லது M. P. மாருக்கு காக்காய் பிடித்து வேலைக்கு போன ஆளா? இல்லை அது மட்டுமா? காப்பியம் படித்த தமிழரின் வளியில், கங்கை கடந்த, கடாரத்தை வென்ற கப்பல் ஒட்டிய தமிழன் மரபில் உதிர்த்த ஓர் வீரத் தமிழன்.

ஆனால் ஒரே ஒரு வீக்னெஸ் [WEAKNESS] அவ்வளவு தூரம் ஆங்கிலம் தெரியாது, இருந்தும் தமிழனின் தன்மானம் விட்டுக் கொடுக்கவில்லை, உணர்ச்சி உந்தி தள்ளியது, தெரிந்த ஆங்கிலம் தமிழுடன் கை கோர்த்துக் கொண்டு அவரின் வெற்றிலை வாயால் வீறுடன் வெளியேறியது "டாய்" I THE மயிலுப்பள்ளை சிருப்பர் OF டும் டும் மருதனு மடம், I WENT ON A HORSE AND வாழைப்பழ தோல் சறுக்கி HORSE FELL DOWN AND I BREAK DOWN I THE MAN OF THOUSAND [1000 Rupees] செக்குறிட்டி AND EATING நாட்டரிசிச் சோறு. BUT YOU ARE A வெள்ளைக்காரன் EATING பிளடிப் பாண். I ஒடா FOOL. YOU ஒடா FOOL, என்றுரே பார்க்கலாம் வாய் அடைத்து நின்ற வெள்ளைக்காரன் அன்றே சிருப்பருக்கு கச்சேரி கதவை அடைத்தான் என்பதும் ஞாயம் தானே.

[இவை யாவும் எனது சொந்தக்கற்பனை மருதனு மடம் சிரித்திரன் வாசகர்கள் எம்மை பெரும் தன்மையுடன் மன்னிப்பதும் ஞாயம் தானே!]

ஆக்கம்-: அச்சுநகரான்
வலன்ரைன்.

உ. கவி:- காவலூர் ஈஸ்வரநாதன்

---

கல்யாணப் பதிவாளர்: இது உனது இரண்டாம் கல்யாணம் தானே?

மணமகன்: ஆமா சேர்.

கல்யாணப் பதிவாளர்: மணமகளின் பெயர் என்ன,

மணமகன்: மாதவி

---

நடிகர்: எனது நடிப்பு எப்படி இருந்தது?

ரசிகன்; உயிருடன் நீ இருக்கும் போது நடிப்பில் உயிர்த் துடிப்பில்லை உயிர்இறந்த பின்பு மேடையில் நீ கிடந்த விதத்தில் உயிர்த் துடிப்பு இருந்தது.

---

வாசக நேயர்க்கு தொடந்து மேற்கு ஜேர்மனி கம்பேக் புகள் பரட்பும் இளைஞர் பேரவையின் முதலாவது ஆண்டு அறிக்கையும் மெயில்வாகனத்தாருக்கு குடை கொடுக்க முன் வந்த பெண்களுக்கு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட ஆட்சேபனையும் ஓய்யப்பங் கங்காணியாரின் கடிதத்திற்கு சவால் விட உள்ளார் தை இதழில்;

அச்சுநகரான் **வலன்ரைன்**

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை அழைத்தாள்

**-இளங்கீரன்**

**முதலாம் பாகம்**

**அத்தியாயம். 10**

ரவீந்திரனின் சிந்தனை நீண்டு கொண்டேயிருந்தது.

"உங்களையே மறந்து யோசனையில் மூழ்கீட்டீங் களே?" என்று கேட்டுக் கொண்டே அவனுக்கு அரு கில் வந்து நின்றாள் கண்ணம்மா.

குரல்கேட்டுத் திரும்பிய ரவி "ஓ... உன்னுடைய அப்பாவைப்பற்றிச் சிந்திச்சுக் கொண்டிருந்ததிலை உன்னை மறந்துபோனன்" என்று சிரித்தான்.

"என்னை மறந்தே போயிடுவீங்களோ?" என்று கண்ணம்மாவும் சிரித்தாள்.

"மறக்கக்கூடாதெண்டு விரும்புறியோ?"

கண்ணம்மா பதில் சொல்லாமல் புன்னகையுடன் அவனைப் பார்த்தாள்.

அந்தப் புன்னகையும் பார்வையும் கூறியதை ரவி புரிந்து கொண்டாலும்அதை வெளிக்காட்டாமல் "அது சரி மலேயாவாக்குத் திரும்பிப் போனதும் வாழ்க்கை யை நடத்த என்ன செய்வதாய் உத்தேசம்?" என்று கேட்டான்.

"அங்குபோய்த்தான் அதை யோசிப்பம். சரி எங்க கதையைச் சொல்லிக் கொண்டிருந்ததிலேயே நேரம் போயிடுச்சு. அம்மா என்னைக் காணும யோசிச்சுக் கொண்டிருப்பா நான் அப்புறம் வர்றேன்" என்று சொல்லிவிட்டு நடந்தாள் கண்ணம்மா.

அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்த ரவிக்கு, அவள்தன் அருமைத்தந்தையையும். செல்வத் தையும், தன் காதலனையும் இழந்து அபலையாய் நிற் பதை எண்ணியதும் மனம் உருகியது. மலேயாவில் அவர்களுக்கு ஆதரவாய் யார் இருக்கப் போகிறுர்கள்? அவர்களுக்கு முன்பு துணையாயும் தோழமையாயும் இருந்த அந்த யாழ்ப்பாணத்துக் குடும்பம் இருந்தால்.

இவ்வாறு எண்ணியதும் அவர்களின் மகன் குமா ருக்கும் கண்ணம்மாவுக்கு மிருந்த காதலைப் பற்றி நினைத்தான் கண்ணம்மா எத்தனை காதல்கனவுகளைக் கண்டிப்பாள்? எத்தனை மனக்கோட்டைகளைக் கட்டியி ருப்பாள்? தனது எதிர்காலத்தை எவ்வளவு தூரம் வண்ணப்பூங்காவாக கற்பனை செய்திருப்பாள்? அவை, யெல்லம் அழிந்து போனதும் அவள் நெஞ்சம் என்ன பாடுபட்டிருக்கும்? எப்படித் தாங்கிக் கொண்டாள்? அவனுடைய காதல் விதவையாகி விட்டதை இப்போ தும் எப்படிச் சகித்துக் கொண்டிருக்கிறுள்?

இவ்வாறு எண்ணியதும், கண்ணம்மாவைப் பற்றிய இந்தக் கேள்விகள் திடீரென்று சுழன்று அவன் மனத் திரையில் ரஞ்சிதமாக உருவெடுத்துநின்றது.

தனக்குள் சிலிர்த்துநிற்கும் பிரயாண ஆசையை யும், அவளைத் தான் காதலிக்க விரும்பாததையும் ரவி சொன்ன பிறகு ரஞ்சிதம் அவனுடன் பேசுவதையே நிறுத்திவிட்டாள். அவனுடைய இயற்கையான குறும் புத்தனமும், துடு துடுத்த போக்கும் எங்கேயோ ஓடி ஒளிந்துவிட்டன. முகம் களையிழந்து சோகத்தின் இருள் மூடுண்டு கிடந்தது. விழிகளில் எதையோ பறிகொ டுத்து விட்டதைப் போன்ற ஏக்கம் பரவியிருந்தது.

ரஞ்சிதத்தின் இந்தத் துயரத்துக்குத் தான்தான் காரணம் என்று எண்ணியதும் ரவீந்திரனும் கலங்கினுன் காதல் அமுதத்தைப் போன்றது மட்டுமல்ல, அது உள் ளத்தின் ஜீவகளையையே சாகடித்து, சகலலட்சணங்களை யும் மங்கச் செய்துவிடும் விஷம் என்பதை நேருக்கு நேர் பார்த்ததும், ரஞ்சிதத்தின் காதலை விஷமாக மாற்றி யதற்காக அவனுடைய நியாய உணர்வு அலறித் துடித்தது. அதற்காக காதல் எனும் அமுதத்தை ரஞ்சி தத்துக்குத் தன்னுல் அளிக்க முடியாதிருப்பதையும் எண்ணி தன்னையே நொந்துகொண்டான். அதே வேளை யில் "ஒரு பெண்ணின் காதலுக்காக ஒருவன் தன்னு டைய எல்லாவற்றையும் இழந்துவிட முடியும். ஆனுல் தன் ஆத்மாவை இழந்து விடமுடியாது. அவ்வாறு இழந்தவனிடம் காதல் சுரக்காது, சுடர் விடாது அவனை விரும்பும் பெண்ணுக்கும் காதல் கிடைக்காது என்று தனது நாவல் ஒன்றில் எழுதியிருப்பதை ரஞ் சிதத்துக்கே நேரில் சொல்லுவதுபோல் தனக்குள் பல தடவை சொல்லிக் கொண்டான்.

### இலக்கிய இன்பம்

ஒரு பிஞ்சுக் குழந்தையை, ஒருஉடற் கூற்று ஆராய்ச்சி வல்லார் சோதித்து, "ஒன்றரை அடி உயரம் 20 அங்குலம் சுற்றளவு பதின்மூன்று ருத்தல் எடை உள்ள ஒரு தசைப் பிண்டம் என்று கூறலாம்" ஆனுல் பெற்ற தாய் அப் படியா கூறுவாள். மறந்தும் கூறமாட்டாள்.

"சீரங்கம் ஆடி
திருப்பாற் கடலாடி
மாமாங்கம் ஆடி
மாசிக் கடலாடி
தைப்பூசம் ஆடி
தவம் செய்து பெற்ற கண்ணே"

என்று அன்பு சொரிந்து அள்ளி எடுப்பாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறப்படும்போது ரஞ்சியிடம் விடை பெற்றுக் கொள்ளக் கூட அவனுக்கு மனம் துணியவில்லை அவன் வீட்டு முற்றத்தில் நின்றபடி திரும்பிப் பார்த்தான். அவள் ரவியின் அறையில் யன்னல் கம்பிகளைப் பிடித்தவாறு கண்ணீர் சொரிய நின்று கொண்டிருந்தாள். நொந்து துடிக்கும் அவளுடைய உள்ளத்தின் வடிவமான கண்ணீர்தான் அவனுக்கு விடையாகக் கிடைத்தது. ரவிக்கு அது துயரக் கண்ணீராக மட்டும் இருக்கவில்லை. அது ஈட்டியைப் போன்று அவனது இதயத்தில் சொருகிநின்றுவிட்டது. சுப்பலுக்காக அவன் ஊரிலிருந்து நாகப்பட்டினத்துக்கு ரயிலில் வரும் வரை அந்த வேதனையால் துடித்துக் கொண்டிருந்தான். நாகபட்டினம் வந்ததும் தனது தந்தையைப் பற்றிய நினைவிலும் கப்பல் ஏறும் பரபரப்பிலும் அந்த மனவேதனை தெரியாமலிருந்தது. இப்போது கண்ணம்மாவைப் பற்றி எண்ணியதும், அவனது இதயத்தில் சொருகியிருந்த ரஞ்சிதத்தின் கண்ணீர் ஈட்டி திரும்பவும் வேதனையைக் கொடுக்க ஆரம்பித்துவிட்டது.

கண்ணம்மாவின் காதலை கொடியயுத்தம் விதவையாக்கி விட்டது. ஆனால் என்னை வீட்டில் நேசித்த ஒரே யோரு ஜீவனான ரஞ்சிதத்தின் காதலை நான் விதவையாக்கிவிட்டேன் அவள் எப்படி அதைத்தாங்கிக் கொள்வாளோ?

அதற்குமேல் அவனால் நிற்கமுடியவில்லை நினைக்கவும் முடியவில்லை மனப்பாரத்துடன் திரும்பி வந்து தன் மெத்தைச் சுருளில் படுத்து விட்டான்.

கப்பல் கண்டீனிலிருந்து ரவி எடுத்துவந்த உணவை தங்கள் மூவருக்கும் பரிமாறிக் கொண்டு தன் தட்டுக்கு முன்னால் அமர்ந்த கண்ணம்மா, சாப்பிடுங்கள் என்று சொல்லிவிட்டு ரவியையே கண்இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

குனிந்த தலைநிமிராது இரண்டு மூன்று கவளம் சோற்றை விழுங்கிவிட்டு சரேலென்று நாகர்ந்து கண்ணம்மாவைப் பார்த்தான் ரவீந்திரன் அவள் சாப்பிடாமல் வாடிச் சோர்ந்திருப்பதையும் விழிக்கோணத்தில் கண்ணீர் முத்துக்கள் திரண்டிருப்பதையும் கண்டதும் சற்றுத் திகைப்போடு ''ஏன் ஒரு மாதிரியாய் இருக்கிறாய்?'' என்றான்.

''இன்னிக்கு ஒருநாள் மட்டுந்தான் நீங்க எங்களோடு இருக்கப் போறீங்க? நாளைக்கு இன்னேரமெல்லாம் கப்பல் பினாங்கு போயிடும் நீங்களும் இறங்கிடுவீங்க அதுதான் என்று நாதளுதளுக்க இடையில் நிறுத்தினாள் கண்ணம்மா.

சோற்றுக்குள் ரசத்தைவிட்டுப் பிசைந்துவிட்டுத் தலை நிமிர்ந்த கண்ணம்மாவின் அம்மா ''துக்கமாய் இருக்கும். அதுக்காக இந்தத் தம்பி எங்களோடு இருந்துவிட முடியுமா? கரையிறங்கி அவங்க அவங்க போற ஊருக்குப் போகத்தானே வேண்டும்?'' என்று சொல்லிவிட்டு கையில் எடுத்த சோற்றுக் கவளத்தை வாயில் வைத்தாள்.



ஒருவர்: கவிஞர் உங்களுக்கு ஒரு விழா எடுக்க ஏற்பாடுகள் செய்கிறோம் இப்போ எங்கோ அவசரமாகப் போகிறீர்கள் போல

கவிஞர்: பிள்ளைக்கு சுகமில்லை டாக்டருக்குக் கொடுப்பதற்கு ஒரு பத்து ரூபாத் தேடி அலையிறன்.

ஒருவர்; சரி கவிஞர் பஸ்பிடிக்க வேணும் நான் வருகிறேன்.

கண்ணம்மாவின் காதில் அம்மா சொன்னது விழுந்ததோ என்னவோ ''இத்தனை நாளும் பொழுது போனதே தெரியேல்லை நாளைக்கு நீங்கள் இறங்கியதும் வெறிச்சோடி விட்டதைப் போலிருக்கும்" என்று துயரத்தால் குரல் கம்மிக் கரகரக்கக் கூறினாள்.

ரவிக்கு அதற்குமேல் சாப்பிட முடியவில்லை கையைக் கழுவிவிட்டு வேட்டித் தலைப்பில் துடைத்தான்

''ஏன்தம்பி அரை வயிற்றோடு நிறுத்திட்டே?" என்று கேட்டாள் கண்ணம்மாவின் அம்மா.

''போதும்" என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிட்டு எழுந்தான் ரவீந்திரன்.

கண்ணம்மாவின் அம்மாவும் அத்துடன் சாப்பாட்டை முடித்துக் கொண்டு தட்டை அலம்பிய வண்ணம் ''தம்பி, உன் ஐய்யாட்ட எங்களைப் பற்றிச் சொல்ல மறந்திடாதே. ஒருநாளைக்கு நீ அவரையும் அழைச்சுக் கொண்டு கோலாலம்பூருக்கு வரவேணும்'' என்று சொல்லி விட்டுத் திரும்பியவள் மகளிடம் ''நீ இன்னும் சாப்பிடேல்லியே?'' என்றாள்.

''எனக்குப் பசிக்கல்ல'' என்று சொல்லிக் கொண்டே தன் சாப்பாட்டை மூடிவிட்டு ரவியை ஏக்கத்துடன் பார்த்தாள்.

''ரவி எழும்பினான்?

''ஏன் தம்பி எழும்பிட்டே?'"

''நான் கொஞ்சம் மேல போக வேண்டியிருக்குது என்று கூறிவிட்டு கண்ணம்மாவைத் துயரத்தோடு பார்த்தான் ''நான் வாறன்'' என்று சொல்லிவிட்டு விருட்டென்று நடந்தான்.

பொழுது கரைந்து கொண்டிருந்தது விடிவதற்கு முன்பே கப்பல் பினாங்குத் துறைமுகத்தில் நங்கூரம் போட்டுவிடுமாதலால் பினாங்கில் இறங்கும் பிரயாணிகள் தங்கள் மூட்டை முடிச்சுகளைக் கட்டிக் கொண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அதிசயம் ஆனால் நிஜம்

இந்தியாவில் உத்தரப்பிரதேசத்தில் பஸ் பிரயாணிகளிடம் டிக்கட் கட்டணம் வசூலிக்கப்படும் போது இன்சூரன்சுக்கென சிறுதொகையும் அவர்களிடம் வசூலிக்கப் படுகிறதாம் பஸ் விபத்து ஏதும் ஏற்பட்டால் பிரயாணிகளுக்கு நட்டஈடாக இது வழங்கப்படுமாம்.

— ச. ரா. பா. —

பெட்டி படுக்கைகளை ஒழுங்கு செய்து கொண்டு மிருந்தனர். கப்பலில் எங்கும் சந்தடியும், பரபரப்பும், இரைச்சலுமாயிருந்தன.

ரவீந்திரன் இந்தச் சூழலில் மூழ்காது படுக்கைச் சுருளில் சாய்ந்தபடி சிந்தனையிலிருந்தான் அவனுடைய எண்ணமெல்லாம் கண்ணம்மாவைச் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது.

கப்பலில் அவர்களுடன் ஒரு வாரந்தான் பழகிய போதும் பல வருடங்கள் பழகியதுபோலிருந்தது ரவிக்கு அந்த ஒரு வாரகாலத்துக்குள் அவர்களுக்குள் ஏற்பட்ட அன்னியோன்யம், கண்ணம்மாவின் மீது பற்றுதலையும் பாசத்தையும் அவனுக்கு உண்டாக்கி விட்டன இது அவனுக்கே ஆச்சர்யாமக இருந்தது. இந்த ஒரு வார காலத்துக்குள் ஏற்பட்ட இந்தப் பற்றுதலுக்கும் பாசத்துக்கும் காரணம் அவனுடைய துயரமான நிலையா? அல்லது அவளுடைய கள்ளங்கபட மற்ற உள்ளம் குளுமையான பேச்சு, கனிவான பார்வை, அமைதியான தோற்றம் இவையா? அல்லது இவை எல்லாமே காரணமா? அல்லது என்னையறியாமலே அவளைக் காதலிக்கிறேனா...? காதல்... மண்ணாங்கட்டி ரஞ்சிதத்தையே என்னால் காதலிக்க முடியேல்லை. கண்ணம்மாவை எப்படிக் காதலிக்க முடியும்? எனக்கு எந்தப் பெண்ணையும் காதலிக்கத் தெரியாது... தெரியவும் வேண்டாம்...

இவ்வாறெல்லாம் அவன் எண்ணினாலும் கண்ணம்மாவின் மேல் உள்ள பற்றுதலையும் பாசத்தையும் அவனால் இனம் கண்டு கொள்ள முடியவில்லை ஆனால் அவளை விட்டுப் பிரிவது அவனுக்குத் துயரமாக இருந்தது. ரஞ்சிதத்தை விட்டுப் பிரியும் போது ஏற்பட்ட துயரத்தையும் விட அதிகமான துயரமாக இருந்தது பிரிவு என்பது உண்மையிலேயே கொடுந்துன்பந்தான் அது உள்ளத்தையே உருக்கிக் கரைத்துக் கலக்கிவிடும் ஒரு பொல்லாத தாக்குதல். ரஞ்சிதமும் இத்தாக்குதலால் துன்பப்பட்டிருப்பா பாவம் அவள், அவளென்ன

கண்ணம்மாவுக்கும் கூட துன்பமாக இருக்குது. அவளும் பாவந்தான் ரஞ்சிக்கு என்னைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் இருக்கிறார்கள். அவள் அபலையல்ல ஆனால் கண்ணம்மா அபலை அவளுக்கு ஒரேயொரு ஆதாரமாயுள்ள அம்மா இறந்து விட்டால் அவள் யாருமே இல்லாத அனாதையாகி விடுவாள் ஐய்யோ இது என்ன கொடுமை! அவள் என்ன பாடுபடுவாள் அவளுக்கு நான் துணையாக இருந்தால்? துணையாக இருக்க என்னால் முடியுமா?

''என்ன இது சிலையைச் சாய்த்து வைச்சமாதிரி அப்படியே இருக்கிறீங்க?'' என்று கேட்டு ரவீந்திரனின் சிந்தனையைக் கலைத்தாள் அங்கு வந்த கண்ணம்மா.

— தொடரும்.


உங்களுக்குத் தேவையான சகலவித மோட்டார் உதிரிப் பாகங்களினதும் உத்தரவாதமிக்க விற்பனையாளர்கள்

★ துரை ★

ஆர், ஜி, பில்டிங்
66, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்,

★ ★ ★

போக்கு வரத்து சேவையின் முன்னோடிகள் ........
உண்மையான பாதுகாப்பு ........
உத்தரவாதமிக்க கவனம் ........
உறுதியான நம்பிக்கை........
உங்கள் பொருட்களை எவ்விடத்திற்காயினும் நம்பிக்கையுடன் அனுப்ப நாடுங்கள்.

ராஜகுமாரி ட்ரான்ஸ்போர்ட் சேவிஸ்

83/2, பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி
யாழ்ப்பாணம், போன்;- 7565.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் அவன் செயலே

"கிறு விழுந்த காசுகள் செல்லாது" என்று ஊரில் ஒரு கதை அடிபட்டது. ஏங்கிப்போனேன். பாடுபட்டுத் தேடி, கேடு கெட்ட பேயனுய்ப் போனேனே என்று வீட்டுக்கு ஓடி வந்தேன். என் பெண்டாட்டி தாள்காசுகளை நிலத்தில் பரப்பி, குந்தியிருந்து கண்கலங்கிக் கொண்டிருந்தாள்.

என்னடியப்பா... ஊரிலை ஒரு கதை உலாவுது. உண்மை தானே... என்றேன் உண்மைதானப்பா... இனி இதை என்ன செய்வது... என்ற கேள்வியை கேட்டாள். என்ன செய்யுறதோயப்பான் காசெண்டு அடுக்கி வைச்சிருப்பம் என்றேன் எரிச்சலாக.

இந்த நாலு பத்து ரூபாய்த் தாளையும் செல்லாக்காசெண்டு ஒதுக்கி வைக்க ஆருக்குத்தான் மனம் பொறுக்கும். ஆக நீ பெத்தது பெண்பிள்ளை, அதிலும் வெள்ளி பூராடம் எண்ட கதையாய்ப் போச்சே... என்று அழத் தொடங்கிவிட்டாள்.

நீ ஏன் ஒப்பாரி வைக்கிறாய். வங்கியிலை மாத்தலாம் எண்ட கதையும் அடிபடுகுது ஒருக்கால் ஆவரங்கால் வங்கிக்குக் கொண்டுபோய்ப் பாப்பம் என்றேன். "பேந்தேன் இருக்கிறியள் ஓடிப் போய் வாருங்கோவன்" என்று கூறி நாலு தாள்களையும் தந்து, கைச் செலவிற்குச் சில்லறையும் தந்து, வங்கிக்குப் போய் வர வழியுமனுப்பிவிட்டாள்.

தொண்டமனாற்றுச் சந்தியில் லசுவிற்கென காத்து நிற்க என்னை போலவே வேறு சிலரும் மடியுக்குள் நெருப்பை கட்டிவைத்திருப்பது போல் அவதிப்பட்டுக் கொண்டு நின்றார்கள். நேரம் போய்க்கொண்டிருந்தது. ஆனால் வசு வந்ததாக இல்லை. அலுப்பும் சலிப்புமாக சனம் பத்தையும் பலதையும் கதைக்க ஆரம்பித்தார்கள்.



அதிகாரி: (வழியில் தனது சிப்பந்தியைக் கண்டுவிட்டு) மாலை ஐந்து மணிக்குத்தானே காரியாலயம் மூடும் நேரம். இப்போ மூன்று மணிக்கே புறப்பட்டுவிட்டாயே ?

சிப்பந்தி: நான் மட்டும் அங்கே தனியாக இருக்கப் பயமாக இருந்தது, அது தான்.

அதிகாரி:- ? ... ? ... ? ...

- கௌளி -

வெண்காயம் இந்தமுறை நல்லாய் படுத்திட்டுது என்றார் ஒருவர் மிழகாய் நல்லாய் ஏறப் போகுது என்றார் மற்றவர் இப்படியே பலதையும் கதைத்து, இடையிடையே "எடை இண்டைக்கென இந்த வானுகளும் ஓடுதில்லையே" என்றும் நொந்து கொண்டார்கள்.

உருவத்தை சனத்தால் மூடி மறைத்தபடி வான் ஒன்று வந்துகொண்டது அதனுள் இருந்த சனம் குனிந்தும் வளைந்தும், சரிந்தும் குந்தியுமிருந்தார்கள். கால் யாருடையது, கையாருடையது தலையாருடையது என்று கண்டுபிடிக்கமுடியாத இடியப்பச்சிக்கல் போதாக் குறைக்கு சொதியும் கறியும் போல எங்களையும் ஏத்திக் கொள்ள வான்காரன் துணிவுடன் நிற்பாட்டிக்கொண்டான். இது அவனுடைய பெருந்தன்மையா அல்லது சுய நலமா என்பது யாருக்கு விளங்கும்.

வந்து நின்ற வானில் இடைவெளி பார்த்து நுழைய முற்பட்டபோது "எவடம் போறியள்" என்ற கேள்வியை வான்காரன் கேட்டான், "ஆவரங்கால்" என்று கூறி என்னை முந்தி ஏற முயன்றவரை வான்காரன் தடுத்து நிறுத்திவிட்டு என்னைப்பார்த்து "எவடம் என்று கேட்டான். நானும் "ஆவரங்கால்" என்ற உண்மையைக் கூறினால் ஏத்தமாட்டான் அதனால் "யாழ்ப்பாணம்" என்று உரத்துச் சொன்னேன். வான்காரனுக்கு என்னை விட்டுப் போக மனமில்லை, நீண்ட தூரம். கொழுத்த காசு என்ற ஆவலுடன் வானை......வா......வந்து ஏறு என்று இழுத்து சனஇடைக்குள் தள்ளினான். புட்போட்டில் கால்களும், உடலின் உறுப்புகள் வானின் உட்புறமுமாகச் செருகுண்டு கொண்டேன்.

வானுக்குள் இருந்த சனம் "இதுக்கை எங்கையப்பா இடம் கிடக்குதெண்டு இன்னும் ஏத்துகிறாய்..." என்று சினந்தார்கள் நீங்கள் மட்டும் போனால் போதுமே மற்றவையையும் ஒத்து மேவி ஏத்தவேணும் தானே

இந்த வருடத்துக்குரிய வானொலி லைசன்ஸ் எடுத்துவிட்டீர்களா ?

இல்லை, வானொலிப்பெட்டி போட இன்னும் பழகவில்லை. அதன்பிறகுதானே லைசன்ஸ் கொடுப்பார்கள்.

— கௌளி —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அதட்டி மீண்டும் நெரிச லுக்குள் என்னைத் திணித்தான். என்னை முந்தி ஏற முயன்றவர் ''என்னையும் ஒத்துமேவிப் போட்டுப் போமன்" என்று வானில் கையைப் போட்டார் உங்களுக்கு வசு பின்னலை வருகுது, கையை விடும் என்று அவரைத் தள்ளி விட்டு ''றைற்'' என்ற சத்தத் தோடு வானில் இரண்டு தட்டும் தட்டினன். வான் சளிஞ்சபடி அசைந்து கொண்டது.



மனைவி: சந்தோரால் வீடுவர ஏன் இவ்வளவு நேரம்?

கணவன்: பள்ளிக் கூடத்துக்குப் போய் விட்டு வருகிறேன்.

மனைவி: பள்ளிக்கூடத்துக்கு ஏன் போனீர்கள். நம்ம ரமாவுக்குத் தான் விடுமுறையாச்சே.

கணவன்: நீவேறெ, நடைபாதையில் நடக்கவில்லையென்று பொலிசார் பிடித்து என்னை போக்குவரத்து முறைப் பள்ளிக்கு அனுப்பிவிட்டார்கள்

— ச. ரா. பா. —

பொய்யைக் கூறி வானுள் ஏறிக் கொண்டேன். இனி ஆவரங்காலில் எப்படி இறங்குவது என்ற யோசனை தொடங்கியது. வான்காரனின் மொட்டைத் தலையும், முட்டைக் கண்ணும், முறட்டு மீசையும் பொல்லாதவன் என்பதை உணர்த்தின. காலங்காத்தாலை வில்லண்டத்தை விலைக்கு வேண்டிப் போட்டேனே என்று பயந்து கொண்டேன். உள்ளதைச் சொன்னல் இவர் என்னைச் சுட்டுக் கடிச்சுப் போடுவரோ...? என்ற துணிவும் வரத்தான், செய்தது. ஆனலும் இப்போதைய பெடியனை நம்பேலாது. கருட்டி அடியெண்டு புதிசாய் இடிபழகியிருக்கிருன்கள். இரண்டு தட்டு தட்டினல்போதுமாம், ஆள் பாட்டிலை விழுந்து விடவேண்டியது தானும். அது உண்மை. இடைக்காட்டுப் பள்ளிக்கூட விழாவிலை ஒரு கருட்டிக்காறன் ஆறு ஏழு ஓடுகளை ஒண்டாய் அடுக்கி, ஒரு இடியிலை அத்தனை ஓடுகளையும் தவிட்டுப் பொடியாக்கினதை கண்ணலை கண்டிருக்கிறன்.

கதையுக்கை கதை, இப்ப பள்ளிக்கூடப் பெடியள் கருட்டியடி பழகுகிறம் என்று சொல்லி பள்ளிக்கூடத்து ஓடுகளைக் களட்டி அடிச்சு உடைச்சு எறியுதுகள். காலம் இப்படியிருக்கையில் வான்காரனும் என்னிலை பழகிவிடுவானே என்ற பயமும் வந்து கொண்டது. வானுக்குள்ளே இருக்கிற சனம் விலக்குப் பிடிக்குமென யோசித்தேன். வேடிக்கை பார்ப் போமென அதுகளும் பேசாமல் இருந்து விட்டால்...? யாரைத் தான் நம்ப முடியும்.

வான் அச்சுவேலிவரைக்கும் வந்து விட்டது. யாழ்ப்பாணம் போவதற்குரிய ஆட்கள் அங்குமிருந்தால், ஏத்துவோம் என்ற நோக்கத்தில் ''யாழ்ப்பாணம்... யாழ்ப்பாணம்...'' என்று கத்தி புட்போட்டில் நின்ற என்னை பெரியவர்... நீர் யாழ்ப்பாணம் தானே இறங்கிறது. இதிலை ஏன் நிக்கிறீர்... நல்லாய் உள்ளுக்குப் போம்... அங்கை நடுச் சீற்றிலை இருக்கிற பெடியனை எழுப்பி, மடியிலை வைச்சுக் கொண்டிரும்... போம்... போம் உள்ளுக்கு என்று தள்ளினன். உண்மையிலை யாழ்ப்பாணம் போகிறதாய் இருந்தால் அப்படிச் செய்திருக்கலாம். ஆனல் நான் இறங்க வேண்டிய இடம் ஆவரங்கால், இவர் யாழ்ப்பாணம் என்ற எண்ணத்திலை உள்ளுக்கு போ என்று தள்ளினல் நான் போவனே...?

பொலிசார் வீதிப் போக்குவரத்து வாரம் கொண்டாடி என் தலை உடைந்து விட்டது.

அடபாவமே! எப்படி?

ரோட்டைக் கடக்கும் போது சாலையின் இருபக்கமும் நன்முசப் பார்த்துக்கொண்டு போகும்படி ஒரு பொலிஸ்காரர் சொன்னர் அப்படியே கடந்தேன். எதிரில் ஒரு ஆசாமியும் அதேபோலப் பார்த்தபடி வாந்தார். எனதும் அந்த ஆசாமியினதும் தலைகள் படாரென்று அடிபட்டுவிட்டன.

— ச. ரா. பா. —

தம்பி...! எனக்கு நாரிப் பிடிப்பு. உதுக்குள்ளை குனிந்து வளைந்து இருக்க முடியாது. புட்போட்டிலை நிண்டு வாறதுதான் எனக்கு வசதி. விருப்பமெண்டால் கொண்டுபோ... இல்லையோ இதிலை என்னை இறக்கிவிடு. என்றேன். அவன் எப்படியும் யாழ்ப்பாணக் காரனை கொண்டுபோக வேணுமென்ற ஆசையில் ''சரி சரி... புட்போட்டிலையே நிண்டு வாணை'' என்று இடம் தந்து கொண்டான். இறக்கிவிட்டிருந்தால் என்பாடு வெற்றியாய் இருந்திருக்கும். ஏனென்முல, அச்சுவேலியிலிருந்து ஆவரங்கால் இரண்டு மைல்தானே. நடையிலை போயிடலாம் என்ற துணிவோடைதான் அப்படிச் சொன்னேன் என்னை யாழ்ப்பாணம் என்று நினைத்து. இறங்கவிடாமல் றைற் என்று வானிலை தட்டிக் கொண்டான். வானும் அச்சுவேலியிலிருந்து ஆவரங்காலை நெருங்கி ஓடிக் கொண்டிருந்த என்பாடு பெரும் கொண்டாட்டமாகிக் கொண்டது மீண்டும் ஒரு திட்டத்தைப் போட்டுக்கொண்டேன் நல்ல கீறு விழுந்த பத்து ரூபாய் தாளை எடுத்து, இந்தாப்பா என்ரை காசு என்று நீட்டினேன் அவன் அதை வாங்கி விரித்துப் பார்த்திட்டு... ''இது செல்லாதணை... வேறை காசு தாணை'' என்முன் இதுதான் தருணம் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உன்னிலுள்ள குறை என்ன?**

தற்பெருமை... நிலைக்கண்ணாடி யில் என்னைப் பார்த்துப் பெருமைப் படுகேன்.

அது தற்பெருமையல்ல கற்பனை

உதுதான் என்னட்டை இருக்குது... வேறை காசில்லை என்றேன். அவன் என்னை முறைத்துப் பார்த்திட்டு, "உம்மை இடை வழியிலை இறக்கிவிட்டால்தான் சரி" என்று கூறி "கோல்டோன்" என்று வானிலை தட்டினான். ஆவரங்கால் வங்கிக்கு முன்னாலை சொல்லி வைச்சதுபோல வான் நின்று கொண்டது.

"இறங்கணை கெதியாய்... செல்லாக் காசையும் காவிக் கொண்டு பட்டணம் போனாராம் பட்டணம்" என்று திட்டினான். நானும் இறங்க மனமில்லாமல் இறங்குவது போல் இறங்கிக் கொண்டேன்.

வான் காரப்பிள்ளை என்னை இடைவழியில் இறக்கிவிட்ட பெருமிதத்தோடு போய்க் கொண்டார். நானும் ஒருவித செலவுமில்லாமல் ஆவரங்கால் வங்கிக்கு வந்து கொண்டேன்.

எல்லாம் அவன் செயலே.

**அமிர்தஞானம்**



எஜமானி : நீ ஏன் போக விரும்புகிறாய்.

வேலைக்காரி : என்னை உங்கள் வீட்டில் ஒருவர் போல் மதிப்பதால்

# இலக்கியச்சாரல்

—சித்திரா—

■ தமிழ்நாட்டில் சென்னையில் இலக்கியச் சிந்தனை என்ற அமைப்பு ஒவ்வொரு மாதமும் வெளிவரும் தமிழ்ச் சிறுகதைகளில் சிறந்த ஒரு கதையாகத் தேர்ந்தெடுத்து பாராட்டும் பரிசும் வளங்கி வருவதுடன் ஆண்டு முடிவில் பரிசுபெற்ற 12 கதைகளிலும் மிகச் சிறந்த கதைக்கு ஆண்டுப் பரிசும் வளங்கி வருகிறது. எழுத்தாளருக்கு ஊக்கமும் உதவியும் அளிக்கும் இவ்வாறான அமைப்பு நம்மிடையே இல்லையே என்ற குறையைத் தமிழ்க் கதைஞர் வட்டம் (தகவம்) போக்கிவிட்டது. கடந்த மாதங்களில் தெணியான், ஆனந்தபைரவி, சட்டநாதன் ஆகியோர் எழுதிய கதைகளுக்கு பரிசும், பாராட்டுடனும் நின்றுவிடாது கதைஞர்களுக்குப் பயன்படும் வகையில் விமர்சனமும் அனுப்பப்படுகிறது. ஆக்கபூர்வமான 'தகவத்'தின் பணி தொடரட்டும்.

■ 1975ம் ஆண்டிற்கான சாகித்திய மண்டலப் பரிசிலுக்குரிய நூல்களின் விபரம் சமீபத்தில் வெளியாகியது. சென்ற ஆண்டு பெறத் தகுதியான தமிழ்க்கவிதை நூல் எதுவுமில்லை என சாகித்திய மண்டலத்தினர் தெரிவித்துள்ளனர் அமர கவிஞர் நீலவாணனின் 'வழி' கவிதை நூல் பரிசு பெறும் தகுதியற்றதாகக் கணிக்கப்பட்டது ஏனோ? இது ஒரு பிரதேச ஒதுக்கீடா? அல்லது அரசியல் குறுக்கீடா? என்ற கேள்வி இலக்கிய சுவைஞர் மத்தியில் எழுந்துள்ளது.

■ சமீபத்திய தமது இலக்கிய அறுவடைகளாக மு. புஷ்பராஜனின் 'அம்பா' கட்டுரைத் தொகுப்பும், பேனா மனோகரனின் 'சுமைகள்' புதுக்கவிதை நூலும் வெளிவந்துள்ளன.

■ கொழும்புத்தமிழ்ச் சங்கம் அண்மையில் நடாத்திய அகில இலங்கை ரீதியிலான கவிதைப் போட்டியில் கவிஞர்கள் ச. பத்மநாதன், அக்கரைசக்தி ஏ. ஞானப்பிரகாசம், நயினை சண்முகநாதபிள்ளை, பொ. கணபதிப்பிள்ளை ஆகியோர் பரிசு பெற்றனர்.

■ சனசமூக நிலையங்கள் மக்களிடையே வாசிக்கும் பழக்கத்தை மட்டுமல்லாது பல்வேறு துறைகளிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் துணை புரியவேண்டும் இவ்விடயத்தில் சில சனசமூக நிலையங்கள் மற்றவைகட்கு வழிகாட்டியாக இயங்கிவருகின்றன.

அண்மையில் வெள்ளிவிழாக் கொண்டாடிய நெல்லியடி சனசமூக நிலையம் தரமான ஒரு இலக்கிய மலர் ஒன்றையும் வெளியிட்டு அவ்வூரின் முன்னேற்றத்தை அனைவருக்கும் புரியவைத்துள்ளது.

சிறுப்பிட்டி சனசமூக நிலையம் தனது வெள்ளி விழாவையொட்டி சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டியான்றினை நடத்துகிறது. 1-1-77ல் நிலையமண்டபத்தில் விழா சிறப்பாக நடைபெறவுள்ளது. நீர்வேலி காமாட்சி அம்மன் சனசமூக நிலையம் நடாத்திய விழாவொன்று, கவியரங்கு, கருத்தரங்கு ஆகியவற்றுடன் இயல், இசை, நாடக முத்தமிழ் விழாவாகவும் மிளிர்ந்தது. வல்வை சனசமூக நிலையங்கள் வெளியிட்டுவரும் கையெழுத்து சஞ்சிகைகள் தரத்திலும் அழகிலும் ஒன்றிற்கொன்று போட்டியிட்டுக்கொண்டு இளையதலைமுறையினரின் ஆக்கசக்திகளின் எடுத்துக்காட்டாய் விளங்கிவருகின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணாமலையாரை நினைவு கூர்கிறோம்

முன்பெல்லாம், பல காலமாக - 1958-ம் ஆண்டு நவம்பர் மாதம் வரை - தினசரி, மாலை 5க்குப் பிறகு, ஒரு சிறிய கார், யாழ்ப்பாணத்துத் தெருக்களிலே ஓடித்திரியும் 'டி' இலக்கங் கொண்ட பழைய 'ஃபோர்ட்' கார், 'கான்வஸ்' துணிக்கூடாரம் நீலநிறம் - மயில் கழுத்துப் போல. அது, தெருக்களில் மட்டுமில்லாது; செம்பாட்டுப் புழுதி நிறைந்த யாழ்ப்பாணத்தின் ஒழுங்கைகள், சந்துகளிலும் போய் வரும். அந்தக் கார் மட்டுமல்ல; அதனை ஓட்டுபவரும விசித்திரமான தோற்றங் கொண்டவராகவே இருந்தார் - மெலிந்த உடல், பழைய காலத்துத் துறவிகள் போல நீண்டு வளர்ந்த தலைமுடியும், தாடி மீசையும்; அதற்கேற்ப, தவவிறல் படைத்த ஒரு முனிவனின் முக கம்பீர்யம். இடுப்பில் ஒரு 4 முழக்கதர் வேட்டி, மேலே இன்னொரு துண்டு போர்த்திக் கொள்ள - இரண்டும் தும்பைப் பூ நிறம்.

இந்தக் காரும், இந்த மனிதரும் அப்போது யாழ்ப்பாணத்து மக்களுக்கு அந்நியமாயிருக்கவில்லை. இன்னுஞ் சொன்னால், அந்த மனிதர் குடாநாட்டு மக்களின் அன்பிற்கும், அபிமானத்திற்கும் பாத்திரமாய் விளங்கினார். அவர்களுக்கு மிக நெருங்கியவராயிருந்தார். அவர்தான், 'பரியாரியார்', 'பரியாரியார்' என்றால், அது சுதுமலை அண்ணாமலைப் பரியாரைத்தான் குறித்தது.

தினசரி, ஓய்வு ஒழிச்சலின்றி காலை 6 மணியிலிருந்து, 4' 5 வரை தன்னைச் சூழ்ந்திருக்கிற நோயாளிகள் மத்தியில் - இருந்த இடத்தால் அசையவும் நேரமில்லாமல் - கடமை புரிந்து கொண்டிருக்கிற பரியாரியார். அதன் பிறகு, தன்னிடம் வர இயலாத நோயாளிகளின் வீட்டுக்கு, அந்தக் காரில் போய்ப் பார்ப்பார். இது அவரின் நித்திய கடமையாயிருந்தது.

"...தன்வந்திரிக்குப் பின்வந்தா [னெனத்
திசை தொறுந் திசைதொறு [நசைமீக்கூர்ந்து
சான்றோரேத்தும் ஏன்ற [மெய்ப்புகழான்..."

—என்று, நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவரால் பாடப்பட்ட பெருமைக்குரியவர் அண்ணாமலையார். தமது 'சிறுவர் செந்தமிழ்' என்னும் நூலையும், இந்த வைத்திய மேதைக்கே சமர்ப்பணஞ் செய்திருந்தார், அந்தக் கவியரசர்.

'இறைவன் சந்நிதியில் எல்லோருஞ் சமம்' என்ற மந்திரத்தைக் கடைப்பிடித்தொழுகி; சாதி, மத, அந்தஸ்து பேதங்கள் தம்மை அணுகாதபடிக்கு, மனுக்குலத்திற்குச் சேவை செய்வதையே தன் இலட்சியமாய்க் கொண்டு, தன் வாழ்வையும் பொருளையும் அதற்காகவே அர்ப்பணித்தவர், பரியாரியார்.

தன் வைத்தியப் பணிக்கு எவ்வித கட்டணமும் அறவிடாது, யாராவது மனமுவந்து கொடுத்தால் மட்டும் - அதையும் தன் சேவையைப் பெருக்குவதற்காகவே - ஏற்று, மக்கள் பணி புரிந்து வந்தார், அவர். தமது பாரம்பரியச் சொத்துக்களையெல்லாம் இப்பணிக்காக விற்கநேர்ந்த போது கூட, தளராது நின்ற ஆண்மையாளர். இல்லையென்றோர்க்கு இனிய இதயத்தோடு இடது கைக்குந் தெரியாமல் ஈந்த வள்ளல். தமிழ்க்கலைகளிலும், சமயத்திலும் பற்றுக் கொண்டவர்; தெய்வ பக்தியும் தூயவாழ்வுங் கைவரப் பெற்றவர்; எல்லாவற்றிற்கும் மேலாக மனுக்குலத்தை நேசித்தவர்.

மாணவன் : சார் முயற்சி திருவினையாக்கு மென்பது உண்மை. ஒரு கணக்கைப் பலமுறை கூட்டினேன்... பல விடைகள் வந்தது.

பெருகி வந்த ஆங்கில வைத்தியத்தின் செல்வாக்குக்கிடையிலும், சித்த வைத்தியத்தின் பெருமையை நிலை நாட்டியதில், பரியாரியாரின் பங்கு மிக மகத்தானது. 1907ம் ஆண்டு, மார்ச் 21-ந் தேதி சுதுமலை நாகலிங்கப் - கனகம் தம்பதிகளுக்கு மகனாய் உதித்த அன்னார், கால் நூற்றாண்டுக்கு மேற்பட்ட மக்கள் பணியின் பின், 1958ம் ஆண்டு, நவம்பர் மாதம் 26-ந் தேதி கார்த்திகை விளக்கீட்டிலன்று - மறைந்தார். தம் உடல், பொருள் ஆவி அத்தனையையும் மக்கள் பணியிலேயே செலவிட்டு மறைந்த இம்மாமனிதருக்கு எவ்விதமான நினைவுச் சின்னத்தையேனும் நிறுவி விடாமல், எம்மை நாம் நன்றி மறந்தவர்களாகவே இன்னமும் நிரூபித்துக் கொண்டிருக்கின்றோம்.

**—தங்கதேவன்—**



ஏன்டா ராமு உனக்கு இந்தக் கெட்ட பழக்கமெல்லாம்!

அப்பா சொல்லுறதைச் செய்யாமல் செய்யிறதைச் செய்தேன்... கெட்டுப்போனேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஸ்பத்திரி வீதியில்

அறுசுவை உண்டிக்கு

அருமையான இடம்

V

ஹோட்டல் குட்லக்

458, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.



கல்யாண சீசன்

மங்கையர்க்கோர்

மங்களமான செய்தி.

அலங்கார அணிகளுக்கும்

அழகுசாதனப் பொருட்களுக்கும்

ஆடையலங்காரத்

தையல் நூல்களுக்கும்

இன்றே விஜயம் செய்யுங்கள்.

*

அம்பிகாபதி ரெக்ஸ்ரைல்ஸ்

66, பெரியகடை — யாழ்ப்பாணம்



For your requirements of
all kinds of welding works

V

Contaet

MANICO INDUSTRIES &
ENGINEERING WORKS

V

Manufacturersof :-
Callapsible Gates - Balcony Railings
Grills, Gates, wheel Barrow
Steel Furniture, Trussers,
Galved Tanks, Bolls aud nuls...etc...

23 — BARBER STREET — GOLOMBO 13.



வாழ்க்கையெனும் காவியத்தில் நீங்கள்
கலையழகுடன் பவனிவர

எங்கள் பட்டுப் புடவைகளை
அணியுங்கள்.

வகைவகையான வண்ணம்
புத்தம் புதிய டிசைன்கள்

நீங்கள் கனவுகாணும் அத்தனை அழகு
டிசைன்களும், வர்ணங்களும்
எம்மிடமுண்டு.

இன்றே விஜயம் செய்யுங்கள்

செல்லமுத்தூஸ் புடவை
மாளிகை

பிரதான வீதி, நெல்லியடி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிக்கையாளர்களுக்கு

எமது

புத்தாண்டு

நல்வாழ்த்துக்கள்

*
*
*
*
*

புத்தாண்டில் உங்களை
புதுமை எழிலுடன் திகழவைக்கும்
புதுப்புதுரக, நவநாகரீகப்
புடவைத்தினுசுகளின் தேர்வுக்கு

நாடுங்கள்

# வனஜா ரெக்ஸ்

பிரதான வீதி, பளை.



Visit

**Durgha**
**Auto**
**Hardwares**

for

ELECTRIC MOTORS, WATERPUMPS, WATERPUMP SPARES,
ALKATHENE WATER PIPES & GENERAL ITEMS.

No. 11, Stanley, Road,
JAFFNA.

Phone : 7204

மின்சார மோட்டர்கள், நீரிறைக்கும் கருவிகள் - உதிரிப்பாகங்கள், அல்கதீன் பைப்வகைகள்.... அனைத்திற்கும்

## -துர்க்கா ஓட்டோ ஹாட்வெயர்ஸ்-

11, ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம் —தொலைபேசி: 7204



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதம தபாற்கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பெற்றது. பதிவு இலக்கம் பி. கியூ. 35/000

ஆண்டுதோறும் 'சாம்பியன் நூலின்'
தரத்தின் வளர்ச்சி உங்கள்
ஆதரவினாலத்தான்.

*

உங்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு
வாழ்த்துக்கள்.

தயாரிப்பாளர்கள் :

சம்பியன் திரெட் மனுபக்சரிங் கம்பனி,.

கொழும்பு - 12

122, நாவலர் வீதி, சி. சிவஞானசுந்தரம் அவர்களால், 122, நாவலர் வீதியிலுள்ள கவின் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org